Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–05 | 20–07–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –153




# சமாதானத்திற்கான வாய்ப்பைச் சீர்குலைத்து யுத்தத்திற்குத் தள்ளுவது வேதனைக்குரியது!

## அரசின் போக்குக்குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**சமாதான வழியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பை நாம் கொடுத்திருக்கிறோம். அந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தாது அதனை சீர்குலைத்துக்கொண்டு நிலைமையை யுத்தத்துக்குள் தள்ளுவது என்பது வேதனைக்குரிய விடயம். எனினும் அதனை எதிர்கொண்டு எமது மக்களையும், தேசத்தையும் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எங்களிடம் இருக்கிறது.**

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக் காலை உலகவங்கிப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஈழநாதம் நாளிதழுக்கும், புலிகளின் குரல் வானொலிக்கும் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்,

*போர் தொடர்பான அறைகூவல்களையும், மிரட்டல்களையும் அரசாங்கம் விடுத்துக் கொண்டு இருக்கிறது இது தொடர்பாக?*

எங்களைப் பொறுத்தவரையில் சமாதான வழியில் பேசி ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வை எட்டுவதுதான் எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால் எமது இந்த நிலைப்பாட்டைப் புறம் தள்ளி அதனை உதாசீனம் செய்து, சமாதானச் சூழலைச் சீர்குலைத்து எமது மக்கள் மீதும், தேசத்தின் மீதும் போரைத் திணிக்கின்ற போது அதனை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு எப்போதும் தயாரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு ம.உ. செயலகத்தின் தலைவருடன் யுனிசெப் பிரதிநிதிகள் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

வட- கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் அருட்திரு வி.ஜி. கருணாரத்தினம் அடிகளாரை, இலங்கைக்கான யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி, வன்னிக்கான யுனிசெப் வதிவிடப்பிரதிநிதி ஆகியோர் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு நேற்று பிற்பகல் விஜயம் செய்த இவர்கள் மேற்படி மனித உரிமைகள் செயலகம் இங்கே ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. இதற்கான தமது பூரண ஒத்துழைப்புக்களைத் தாம் வழங்குவதாகவும் தெரிவித்து, செயலகத்தின் பூரண செயற்பாடுகளை கேட்டறிந்துள்ளார். அத்துடன் இலங்கைக்கான யுனிசெப் நிறுவனப் பிரதிநிதி ரொனி மென்கோ அவர்கள் செயலகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மனித உரிமைகள் தொடர்பான ஒரு தொகுதி புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (லோ)

## உலகவங்கிப் பிரதிநிதிகளுடன் விடுதலைப்புலிகள் நேற்றுச் சந்திப்பு

உலகவங்கிப்பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது. நேற்றுக்காலை 9.45 மணிக்கு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பு 10.45 மணி வரை நீடித்தது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரும், உலகவங்கிப் பிரதி நிதிகள் சார்பில் பீற்றர்கரோல் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர். (லோ,தீ)



## பாடசாலை சென்ற மாணவன் மயக்க முற்ற நிலையில் மீட்பு

(மட்டக்களப்பு)

பாடசாலை சென்ற மாணவனை மயக்கமருந்தூட்டி கடத்தப்பட்ட சம்பவம் தம்புலு வில்லில் இடம் பெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

தம்புலுவில் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் கோமாரியைச சேர்ந்த குறித்த மாணவன் நேற்று பஸ் வண்டியில் வந்திறங்கிய போது கறுப்புநிற வானொன்றில் வந்த சிலரால் மயக்கமருந்தூட்டி கடத்தப்பட்டார.

சாய்ந்த மருதில் வாகனம் பழுதடைந்தை அடுத்து மயக்கத்தில் கிடந்த மாணவன் சிறிது உணர்வு வரப்பெற்று கடத்தல்காரரிடம் இருந்து தப்பியுள்ளார். அப்பகுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரமேஸ், கௌசல்யன் நேற்று மட்டு. பயணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த மட்டு. அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி கேணல் ரமேஸ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் தளபதி பிரபா ஆகியோர் நேற்றுக்காலை உலங்கு வானூர்தி மூலம் மட்டக்களப்புக்கு புறப்பட்டுச் சென்றனர். இவர்கள் காலை 10.30 மணியளவில் மட்டக்களப்புக்குச் சென்றடைந்தனர்.

## உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கையின் தமிழ்ப் பிரதி நேற்று கிளி.யில் வெளியீடு

(அலுவலகசெய்தியாளர்)

உலக வங்கியின் 2004 ஆம் ஆண்டுக்கான உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கையின் தமிழ்ப் பிரதி நேற்றுக் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தின் உலக வங்கிப் பிரதிநிதிகளால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலக செயலாளர் தூயவன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை திட்டமிடல் அபிவிருத்திச் செயலக நிர்வாகப்பணிப்பாளர் மாறன் நிகழ்த்தினார். நூல் அறிமுக உரையை திட்டமிடல் அபிவிருத்தி செயலக செயலாளர் எஸ்.தூயவன் டாக்டர் சாந்தாயனன் தேவராஜன், உலகவங்கி பிரதம பொறியியலாளர் ராஜன் ஆகியோர் நிகழ்த்தினர். பதிலுரையை யாழ் பல்கலைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)



உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கை வெளி

## நீலப்படம் பார்த்த இருவர் சிறில. பொலிசாரால் கைது

கல்வியங் காட்டுப்பகுதியில் நகைக்கடை ஒன்றினுள் நேற்று முன்தினம் இரவு வேளையில் "நீலப்படம்" பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் கையும் மெய்யுமாகப் பொலிசாரிடம் பிடிபட்டுள்ளனர்.

நகைக்கடை உரிமையாளரும், அங்கு பணியாற்றும் இளைஞனுமாக இருவரும் கோப்பாய் பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்தே இவர்கள் பிடிக்கப்பட்டிருந்தனர். நேற்று யாழ்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை எச்சரித்து விடுவித்த நீதவான் மூவாயிரம் தண்டப் பணமும், இரண்டாயிரமும் தர்மப்பணமும் செலுத்த உத்தரவிட்டார். (27)

## சிறிலங்கா பிரதமர் ராஜபக்ஷ இந்தியப் பிரதமருடன் சந்திப்பு

இந்தியா இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் அதிக அக்கறை கொண்டு செயற்படுவதாக அந்த நாட்டு பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். சிறிலங்காவின் பிரதமர் மகிந்தராஜபக்ஷ இந்திய பிரதமரை சந்தித்தபோதே கருத்து வெளியிடப்பட்டது. தொடர்ந்து நேற்று முன்தினம் இந்திய நிதியமைச்சர் சிதம்பரத்தை சந்தித்து சிறிலங்காப் பிரதமர் உரையாடியதைத் தொடர்ந்து இந்தியா இலங்கைக்கு 25 கோடி டொலரை நிதியுதவியாக வழங்கஇணங்கியுள்ளது. இதில் 10 கோடி டொலரை உடனடியாக வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்தது இதேவேளை நேற்று சிறிலங்காப் பிரதமர் தமது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பினார் இந்திய விஜயத்தின்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்திய ராஸ்டபதிஅப்துல்க..லாம், இந்திய கொமியுனிஸ் கட்சித்தலைவி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சிவகுலவீதி உரும்பிராய் தெற்கு உரும்பிராயைச் சேர்ந்த் சிவசுப்பிரமணியம் பூபதி என்பவரின் 386110166v என்ற இலக்கமுடைய தேசிய அடையாளஅட்டை புளியங்குளத்திற்கும் முகமாலைக்குமிடையில் 19.06.2004 அன்று காணாமல் போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 0773024209

(சி-10031)

### குயிலன் புத்தகசாலை

**ஆனந்தபுரம் கிளிநொச்சி.**

எமக்குரிய பிரயாணப்பை முக்கிய ஆவணங்களுடன் எமது கடைக்கும், 155ஆம் கட்டைக்குமிடையில் இரவு 7மணிக்கு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எமது கடையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்கிறேன். (4706)

### N.E.C.

A9வீதி கிளிநொச்சி.
ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் வகுப்பு புதன்-வெள்ளிவரை 2மணி-6மணிவரை நடைபெற இருக்கி றது. நிர்வாகம். (4832)



முள்ளி...வாய்க்கால் மேற்கு
ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய

## வருடாந்த ஆடிப்பூர உற்சவம்

எதிர்வரும் 21.07.2004 புதன்கிழமை அன்று பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த ஆடிப்பூர உற்சவ விழா ஆரம்பித்து, 23.07.2004 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நிறைவடையும். அடியார்கள் அனைவரும் வருகை தந்து அன்னையின் அருளைப் பெற்று ஏகுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் மேற்கு,
முல்லைத்தீவு. (சி-9148)

ஸ்ரீபத்திரகாளி
ஆலயத்தினர்.


## கோடைகால ஜில்சொப்பிங்

* முகூர்த்தப்பட்டுச் சாறிவகைகள்
* வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
* சாறிவகைகள் * சேட்,T.சேட் * சூட்வகைகள்
* ஜம்பர்வகைகள் * ரவுசர்த்துணிவகைகள் * கவுண்வகைகள்
* டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் * கோட்சூட்
* ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் * பேபி கவுண் வகைகள்

போன்றவற்றை

தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள

**மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்** T.P.:0214590174

இல.10,மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி.9757)


## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
1972 ★ 03 ★ 28



தாயக மண்ணில்
1991 ★ 07 ★ 20

## வீரவேங்கை தர்சினி

**அருளம்பலம் ரஞ்சினி**

(ஆகாயக் கடல் வெளித்தாக்குதல்)

தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெற
தமிழனுக்(கு) ஒரு சரித்திரம் படைத்திட
ஈழப்போரில் இணைந்து - இடையில்
ஆகாயக்கடல் வெளித்தாக்குதலில்
அழியாத நினைவு தந்து துயின்றவளே!
விழிக்காயோ மீண்டும் அமைதியாய் மலரும்
தமிழரசு ஆட்சியைப் பாராயோ.

முகவரி இல 52,D-10
உருத்திரபுரம் (4830)

பிரிவுத்துயரில்,
குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலைகள்

### ஐ.என்.பி. இல :– எம்யூ/ஜேபிஐசி/எச்டபிள்யூ/01

01 நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம்-9இலும், அதற்கு மேற்பட்டும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து மாவட்டக் கேள்விச் சபைத் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02 கீழே குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது முல்லைத்தீவில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (DRAFT) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடம் இருந்து 29.07.2004 (வியாழக்கிழமை) திகதி பி.ப.3.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

03 ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றை வரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒருதொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும். ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி, மாகாணக் கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

05 சமர்பிக்கப்படும் கேள்விகள், திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, மாவட்டச்செயலகம், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 2004-08-05 (வியாழக்கிழமை) திகதி மு.ப 10.30மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம்.

06. வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. கேள்வி விபரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | நிறைவேற்ற வேண்டிய காலம் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| திருத்தம்:- மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு. Mu/JBIC/HW/01 | M-09 | 8000/= | 03 மாதம் | 1000/= |

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

(சி-9150)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்–முல்லைத்தீவுக் கிளை

# பணிநிலை வேண்டுகை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சங்க முல்லைத்தீவுக் கிளையில் ஒப்பந்த அடிப்படையிலான கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடன் 21.07.2004 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவை சங்க முல்லைத்தீவுக் கிளைப் பணிமனைக்கு (புதுக்குடியிருப்பு) நேரில் சமுகம் கொடுக்கவும். இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளையில் தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ளோர் களிற்கு முன்னுரிமை வழங்கப் படும்.

**பணிநிலை –01**

பதவி :- இளைஞர் இணைப்பாளர் (Youth Co -ordinator)
தகைமை :- 01. க.பொ.த.(சா/த)
02. துறைசார்ந்த அனுபவம்.
வயது :- 23-45க்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பணிநிலை –02**

பதவி :- முதலுதவி இணைப்பாளர் (First Aid Co -ordinator)
தகைமை :- 01. க.பொ.த.(சா/த)
02 துறைசார்ந்த அனுபவம்.
வயது :- 23-45க்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பணிநிலை –03**

பதவி :- பரப்புரை உத்தியோகத்தர் (Dissemination Officer)
தகைமை :- 01. க.பொ.த.(சா/த)
02. துறைசார்ந்த அனுபவம்.
வயது :- 23-45க்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா
கௌரவ தலைவர்
இ.செ.சி.சங்கம்
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி/9149)

# பாக்தாத்தில் பொலிஸ் நிலையமருகே

# குண்டுவெடித்து 10 பேர் பலி; 50 பேர் காயம்

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் பொலிஸ் நிலையத்திற் கருகில் நேற்று இடம் பெற்ற தற்கொலைக்குண்டுதாரியின் தாக்குதலில் பத்துப்பேர் கொல்லப்பட்டதோடு ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**


அதிகாரியைச் சந்திப்பதற்காக பொலிஸ் நிலைய வாசலில் பொலிசார் வரிசையில் காத்திருந்த போது தற்கொலையாளி ஒருவரால் ஓட்டிச் செல்லப்பட்ட எரிபொருள் நிரப்பிய ரக் வண்டி வெடித்துச் சிதறியுள்ளது.

இக்குண்டு வெடிப்பினால் அருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கும் கட்டடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

ஈராக்கிலிருந்து பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் வெளியேறி வரும் வேளையில் இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஈராக்கில் ஆட்சிப் பொறுப்பு இடைக்கால நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

கடந்த இரண்டு வாரங்களாக இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் 40 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருந்தது தெரிந்ததே. ஈராக்கில் கடந்த சில வாரங்களாக இடம் பெற்றுவரும் தாக்குதல்களில் இது மிகப் பெரியதாக்குதல் என்று சொல்லப்படுகிறது.



லற்பியா என்ற இடத்தில் விமானத்தாக்குதலுக்குள்ளான எண்ணெய் தாங்கியொன்று வெடித்து தீப்பற்றி எரிவதையும் தூணின் மறைவில் அமர்ந்திருக்கும் அமெரிக்க ராணுவச்சிப்பாயையும் காணலாம்.

## பேச்சுவார்த்தை ரத்து


(சியோலில்)

இரு கொரியாக்களுக்குமிடையிலான இராணுவ நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சியோலில் நேற்று இடம் பெறவிருந்த வடக்கு மற்றும் தெற்கு கொரிய அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் வடகொரியாவில் ரோந்து படகுகள் சர்ச்சைக்குரிய கடல் எல்லையைத் தாண்டிப் பயணம் செய்தவேளை தென்கொரிய ரோந்துப் படகுகள் எச்சரிக்கை தெரிவிக்கும் வகையில் இரண்டு துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துள்ளன. இதன் காரணமாகவே வடகொரிய பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லையென அறிவித்துள்ளது.

## வேகமாகப் பரவும் காட்டுத்தீ

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோனியா மாகாணத்தில் வனப்பகுதியில் காட்டுத்தீ பரவி வருகின்றது. இதனால் 16ஆயிரம் ஏக்கர் காடு தீயில் கருகி சாம்பலாகியுள்ளதாக கூறப்படுகின்றது. உலங்கு வானூர்திகள் விமானங்கள் மூலம் தண்ணீர் ஊற்றப்படுகிறது.



லாபாஸில் நடைபெற்ற கருத்துக்கணிப்பு வாக்களிப்பு தினத்தன்று முகமூடியணிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கையில் தடியுடன் வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர்

# பறக்கும் பலூனில் பழுது

# 15 பேரும் பாதுகாப்பாக மீட்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பறக்கும் பலூன் ஒன்று நடுவானில் பழுதடைந்த போதும் அதில் பயணம் செய்த ஐந்து குழந்தைகள் உட்பட 15 பேர் அதிஷ்ட வசமாக உயிர் தப்பியுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருகையில்:-

அமெரிக்காவின் மெரிலன் பகுதியிலுள்ள பால்றிமோர் நகரில் நேற்று முன்தினம் வாயு நிரப்பப்பட்ட பலூனிலே இவர்கள் பயணம் செய்துள்ளனர். பலூன் தரையிலிருந்து சுமார் 350 அடி உயரத்திற்கு சென்ற பின்னர் பலூனில் சிறிய கோளாறு ஏற்பட்டதாகவும் இது குறித்து பலூனில் பயணம் செய்தவர்கள் தரையில் உள்ளவர்களுக்கு தகவல் கொடுத்ததன் காரணமாக அவர்களைப் பத்திரமாக மீட்க தீயணைப்புப் படையினரை அனுப்பி வைத்ததன் காரணமாக பலூனில் கட்டப்பட்ட நீண்ட கேபிளைக் கொண்டு பலூன் சாமர்த்தியமான முறையில் தரையிறக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அதில் பயணம் செய்த குழந்தைகள் உட்பட ஏனையோரும் சிறுகாயங்களுடன் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஆறு கோரிக்கைகளை ஏற்க சூடான் அரசாங்கம் மறுப்பு

# தீவிரவாதிகள் சமாதான மாநாட்டிலிருந்து வெளியேறினர்

## -யுத்தம் மூளுமென மக்கள் அச்சம்

சூடானின் டாபர் பிரதேசத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவது சம்பந்தமான மாநாட்டிலிருந்து கிளர்ச்சி வாதிகள் வெளியேறியுள்ளார்கள்.

தாங்கள் விதித்துள்ள ஆறு நிபந்தனைகளையும் அரசாங்கம் பூர்த்தி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றப் போவதில்லை யென்று கிளர்ச்சிவாதிகள் தெரிவித்துள்ளனர்.

அலியபாபாவில் இடம் பெற்ற இம்மாநாட்டை ஆபிரிக்க யூனியன் என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது. இம் மாநாட்டில் கலந்து கொண்ட சூடானின் வெளிவிவகார அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், கிளர்ச்சி வாதிகள் சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்கவில்லை யென்பதையே அவர்கள் வெளியேறிய நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது என்று கூறினார்.


இதன்மூலம் 18 மாதகாலம் நீடித்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

டாபர் பிரதேசத்தில் 18 மாத காலமாக இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக 30 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். 10 இலட்சத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளார்களென்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளர்ச்சிவாத நீதி மற்றும் சமத்துவ இயக்கத்தின் பேச்சாளரான அகமத் இஸ்ஸான் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களது ஆறு கோரிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டும் சமாதான நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்குபற்றுவோம் எனத் தெரிவித்துள்ள அவர் பென்ஜபிற் அரபு இராணுவத்தினரை நிராயுதபாணிகளாக்குதல், இன ஒழிப்பு நடவடிக்கையிலீடுபட்டவர்கள் மீது நீதிமன்ற விசாரணை, மனிதாபிமான நடவடிக்கைகளிற்கு வசதி அளித்தல், யுத்தக் கைதிகளின் விடுதலை, எதிர்கால பேச்சுவார்தைகளுக்கு நடுநிலையானதொரு நாட்டைத் தெரிவு செய்தல் என்ற ஆறு நிபந்தனைகளையுமே நாங்கள் முன்வைத்தோம். இவற்றை ஏற்றுக்கொள்ள அரசு முன்வராததால் நாம் அந்த மாநாட்டிலிருந்து விலகிக் கொண்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

சமாதான மாநாட்டில் இருந்து தீவிரவாதிகள் விலகியுள்ளதையடுத்து யுத்தம் மூளும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.




பிலிப்பைன்ஸ் இராணுவத்தை ஈராக்கிலிருந்து மீளப் பெறுமாறு கோரி தலைநகர் மனிலாவில் சுலோகத்தை ஏந்தி நிற்கும் பெண்ணொருவர்.



பங்களாதேஷ் வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள தாயும், பிள்ளைகளும் மீட்பாளர்களை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர்.

# யசீர் அரபாத்திற்கெதிராக பலஸ்தீனத்தில் ஆர்ப்பாட்டம்

(ஜெருசலேம்)

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற ஆர்ப்பாட்டங்கள் காஸா முனையில் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.


பலஸ்தீன அரசாங்கத்தில் லஞ்ச ஊழல் ஒழிக்கப்படவேண்டும் எனவும் பாதுகாப்புப் பிரிவு புனரமைக்கப்படவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் வலியுறுத்தி வருகின்றனர். இதே வேளை அரபாத் பிரதமர் அகமத் கூரியின் பதவி விலகல் உட்பட பல்வேறு பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாக்தாத்துக்கு 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஹடித்த என்ற இடத்தில் நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பையடுத்து மீட்புப்பணியிலீடு பட்டுள்ள ஈராக்கியர்.

# போராளிகளின் அர்ப்பணிப்பு, தியாகத்தால் முல்லை நகரம் புதுப்பொலிவு பெற்றுள்ளது

## - கடற்புலிகளின் தாக்குதல் தளபதி மங்களேஸ்



(அலுவலக செய்தியாளர்)

**எமது போராளிகளின் அர்ப்பணிப்பாலும் தியாகத்தாலும்தான் இன்று முல்லைநகரம் புதுப்பொலிவு பெற்றிருக்கிறது. இவ்வாறு கடற்புலிகளின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முல்லைப் பெருந்தளம் தாக்கி அழிக்கப்பட்டதன் எட்டாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எமது மக்களின் சொத்துக்களை ஆக்கிரமித்து முல்லைத் தீவிலே பெருந்தளம் அமைத்து எமது மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியவாறு அமைந்திருந்த முல்லைப் பெருந்தளம் எமது தேசியத்தலைவரின் தீர்க்கமான வழிநடத்தலினால் வெற்றி கொள்ளப்பட்டது. எமது மக்களை தமது வீடுகளில் இருந்து எவ்வாறு படையினர் துரத்தினார்களோ அதே போல சிங்களப்படையினரையும் எமது தமிழர் படைகள் துரத்தி புறமுதுகிடவைத்த சாதனை இங்கே தான் நிகழ்ந்தது.

அதுமட்டுமன்றி இந்த முல்லைத்தள மீட்பில் ஒருவரலாற்று சாதனை இருக்கிறது. முதல்முதலாக இரண்டு ஆட்லறிப் பீரங்கிகளை நாம் கைப்பற்றியதும் இந்தச் சமரில்தான். இந்தச் சமரின் வெற்றிக்காக நாம் 375க்கும் அதிகமான போராளிகளின் உயிர்களைவிலையாகக் கொடுத்திருக்கிறோம். அவர்களின் அர்ப்பணிப்பும், தியாகமும் தான் எமது இந்த முல்லைநகர் இன்று செழிப்படைந்து காணப்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

கடலிலும் தரையிலும் எதிரி செய்வதறியாது திகைத்து நின்றான். எதிரியின் கொட்டம் அடக்கிய பெருஞ்சமரான முல்லைச் சமர் எமது விடுதலைப் போராட்டத்துக்கும் மக்களுக்கும் ஒருவித உத்வேகத்தை ஏற்படுத்தி மேலும் எம்மை விடுதலைப்பாதையில் வீர நடைபோடஉந்துதலாகவும் அமைந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,ச)

## முன்பள்ளி திறப்பு

(மன்னார்)

மன்னார் வட்டக்கண்டலில் எட்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட முன்பள்ளி ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பள்ளியை மன்னார் டோஆ, நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.றொபட்கைகீஸ் திறந்து வைத்தார். இதில் எழுபத்தைந்திற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்கின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

## தாயகம் திரும்பும் அகதிகளுக்கு வாழ்வோதயம் உடனுதவி

மன்னாரில் வாழ்வோதய நிறுவனம் நாடு திரும்பும் அகதிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றது.

குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்கள் தம் சொந்த இடங்களுக்கு வந்தவுடன் மூன்று தினங்களுள் 3500 ரூபாவையும் வழங்குவதுடன் தற்காலிக கொட்டகைகளும் அமைத்து கொடுக்கின்றது.

மேலும் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வருவோரின் நலன் கருதி மதிய உணவுகள் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அத்தோடு போர்க் காலங்களில் அங்கவீனர்களானவர்களுக்கு செயற்கை உறுப்புக்களையும் இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது.

மேலும் பல வீட்டுத் திட்டங்கள், பாலர் பாடசாலைக்குரிய தளபாடங்கள், புத்தகங்கள், கொப்பிகள் போன்றவற்றையும் வழங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் இயக்குனராக அருட் தந்தை எஸ். ஜேசுராஜா பணியாற்றி வருகின்றார். (மி)

## வட்டக்கச்சி 70 ஏக்கர் பகுதியில் சிறுபோக நெற் செய்கை பாதிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்ட 70 ஏக்கர் பகுதியில் சிறுபோக நெற் செய்கைக்கு போதிய அளவு நீர் இன்மையால் பயிர் நிலங்கள் எரிந்து வருகின்றன.

வட்டக்கச்சி கறுப்பிக்குளம் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இக்குளத்தில் இருந்து 70 ஏக்கர் பகுதிக்கு நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால் புதிதாக அமைக்கப்பட்டு வருவதால், பழைய வாய்க்கால் துரிசு முற்றாக கட்டப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிக்கு நீர் இன்மையால் பயிர் நிலங்கள் எரிந்து வருகின்றன. இரணைமடுக் குளத்தின் கீழ் விவசாயம் செய்யப்படும் பயிர் நிலங்களில் இருந்து சிறிது கழிவு நீர் வெளி வருவதால் அதனையே அப்பகுதி விவசாயிகள் மறித்து நீரினைப் பாய்ச்சி வருகின்றனர். இதனால் ஒரு விவசாயி 4 அல்லது 5 நாட்களுக்கு நீரினைப் பாய்ச்சி வருவதால் மற்றைய நிலங்கள் எரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

## வவுனியா நலன்புரி நிலையங்களில்தங்கியுள்ள 300 குடும்பங்களை மீள் குடியமர்த்த ஏற்பாடு

(செட்டிகுளம்)

போர் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த 97,280 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டு இருப்பதாக வவுனியாஅரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். இவர்கள் 24,566 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களில் 6118 குடும்பங்களைச் சேர்ந்த 24,023 பேர் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளக்குடியமர்ந்தவர்கள் . போர் காரணமாக இடம் பெயர்ந்த பலர் தொடர்ந்தும் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு வாழ்ந்து வருபவர்களில் 300 குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்காக கோதாண்டர் நொச்சிக்குளம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தக் மக்களின் மேம்பாட்டை கருத்திற் கொண்டு இந்த குடியேற்றத்தினை துரிதப்படுத்தப் படவேண்டி இருப்பதாகவும் வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (21)

## பாலியல் சம்பந்தமான நோய்கள் இளைஞர்கள் மத்தியில் அதிகரிப்பு!

### -வவுனியா வைத்தியசாலை புள்ளிவிபரங்கள் தகவல்

(செட்டிகுளம்)

இளைஞர்கள் மத்தியில் பாலியல் சம்பந்தமான நோய்கள் அதிகரித்துக் காணப்படுவதாக சுகாதாரப்பிரிவினர் தெரிவிக்கின்றனர். தென்பகுதிக்கு போகின்றவர்களுக்கே இவ்வாறான நோய்கள் அதிகமாகக்காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த முறை கல்விப் பொதுத்தராதரப் உயர்தரப் பரீட்சையில் தோன்றிய மாணவர்கள் மூன்று பேர் கொழும்புக்குச் சென்று வவுனியாவுக்கு வந்த போது அவர்கள் மூன்று பேருக்கும் 'கோணேறியா' என்ற பாலியல் நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக வவுனியா வைத்தியசாலைப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதே போன்று வியாபார நடவடிக்கைகளுக்காக தென்பகுதிக்குப், போகிறவர்களுக்கும் இவ்வாறான நோய் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கொழும்பில் தங்கியிருக்கும் போது தகாத உறவுகளில் ஈடுபடுவதன் காரணமாகவே அவர்களுக்கு இந்த நோய்கள் தொற்றி இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு இதுவரை 'சிபிலிசு' நோய்க்கு உள்ளாகி ஒருவரும், 'கோணேறியா' நோய்க்கு உள்ளாகி 33 பேரும் 'ஹேர்பீஸ் நோய்க்கு உள்ளாகி 06பேரும், 'கிளமீடியா' நோய்க்கு உள்ளாகி 27 பேரும் சிகிச்சை பெற்றிருப்பதாக வவுனியா பொது மருத்துவமனை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (27)

## பண்ணையாளர் பரிசு போட்டியில் வெற்றி பெற்றோர்

(மல்லாவி)

துணுக்காய் பாண்டியன்குளம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரால் துணுக்காய் கால்நடை வைத்தியர் பிரிவில் 2004ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நடாத்தப்பட்ட பண்ணையாளர் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் விபரம் வருமாறு,

மாடு வளர்ப்பு:- த.சிவபாதம் 1ஆம் இடம் (3ஆம் யுனிற்), ச.தர்சினி 2ஆம் இடம் (அனிஞ்சியன் குளம்), த.தயாபரன் 3ஆம் இடம்(மல்லாவி)

ஆடு வளர்ப்பு:- செல்வி செ.மதிவதனி 1ஆம் இடம் (கல்விளான்), திருமதி ம.செல்வரட்ணம் 2ஆம் இடம் (2ஆம் யுனிற்), இ.உதயகுமார் 3ஆம் இடம் (அனிஞ்சியன்குளம்)

கோழி வளர்ப்பு:- கு.பாலபவானி 1ஆம் இடம் (4ஆம் யுனிற்), து.ஜேசுதானந்தர் 2ஆம் இடம் (5ஆம் யுனிற்), பா.கிருஷ்ணகுமாரி 3ஆம் இடம். (கரும்புள்ளியான்). (24)

## சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு தெரிவு

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு தெரிவுக்கூட்டம் வடகாடு, ஒட்டறுத்த குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டப முன்றலில் அண்மையில் சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் க.சிவா தலைமையில் இடம்பெற்றது.

பாண்டியன் குளம் பிரதேச அரசியல்துறைப்போராளி தொ.வேங்கைமாறன், சமூக மேம்பாட்டு இணைப்பாளர் க.சிவா, ஒட்டறுத்தகுளம் கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். புதிதாக அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக வே.துரைசிங்கம், செயலாளராக நடராசா விஜயலட்சுமி, பொருளாளராக நடராசா விமலதாஸ், உப தலைவராக செல்லப்பா பத்மநாதன், உப செயலாளராக ஆசைப்பிள்ளை செல்வநாயகம் ஆகியோருடன் 06 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (24)

## -வவுனியா மாவட்டத்தில் வேலைத்திட்டங்களை இணைந்து முன்னெடுக்க 'கார்வ்' முடிவு

(செட்டிகுளம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், வீதி, சமூகமேம்பாடு ஆகிய நான்கு கூறுகளையும் உள்ளடக்கி நிக்கொட் திட்டத்துடன் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாக கார்வ் திட்டப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கு அமைவாக 15 கருத்திட்டங்களைக் கொண்ட கல்விக்கு 58 மில்லியனும், 05 கருத்திட்டங்களைக் கொண்ட சுகாதாரத்திற்கு 47 மில்லியனும், 01 கருத்திட்டத்தைக் கொண்ட வீதிக்கு 12 மில்லியனும், 01 கருத்திட்டத்தினைக் கொண்ட நீர்பாசனத்திற்கு 09 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (21)

## கட்டட வேலைகள் ஆரம்பம்

முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் என்பன அமைப்பதற்கான ஆரம்பக் கட்டவேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

நீர்ப்திட்டநிதியில் இவ்விருபணிமனைகளும் ஓகஸ்ட் மாதம்31 ஆம் திகதிக்கு முன்பு அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)



மல்லாவி மருத்துவமனையில் கடந்த 08.07 2004 அன்று விசேட வைத்திய நிபுணர்களால் இருதய நோய், சலரோகம், மூட்டு வாதம், பற்சிகிச்சை போன்ற நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டதைப் படத்தில் காண்க.

படம்.க. அன்ரனி

# நாம் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்க்கை இன்னும் தோற்றுவிக்கப்படவில்லை

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமெ.தூதரக அதிகாரிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இலங்கை ஒரு அமைதியான சூழலைத் தோற்றுவித்துள்ள போதிலும் எமது நாளாந்த வாழ்க்கையில் எந்த விதமாற்றமும் ஏற்படவில்லை நாங்கள் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்க்கை இன்னும் தோற்று விக்கப்படவில்லை.**

சர்வதேச தமிழீழ மாணவர்பேரவையினால் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அதிகாரி கோடி சீ.ரெயிலர் அம்மையாரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறியவென தாங்கள் விஜயம் செய்வதையிட்டு நாங்கள் மகிழ்வடைகின்றோம். அதே சமயம் எமது உண்மை நிலையை உங்களுக்கு விளக்க விரும்புகிறோம். எங்களது அடிப்படை உரிமைகளுக்காக நாங்கள் போராடுகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எமக்குரியஉரிமைகளை வழங்குவதற்கு சிங்கள அரசாங்கம் விருப்பமின்றி இருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இலங்கை ஒரு அமைதியான சூழலைத் தோற்றுவித்துள்ள போதிலும் எமது நாளாந்த வாழ்க்கையில் எந்த விதமாற்றமும் ஏற்படவில்லை. நாங்கள் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை.

சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரத்தை வழங்குவதற்குக் கூட இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. இந்த நிலைமை எமக்கு வேதனையளிக்கின்றது.

அரசாங்கம் மற்றொரு போருக்காகவே எம்மை வற்புறுத்தி இழுக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க இராணுவப் புலனாய்வுத் துறையினர் யுத்த தந்திரோபாயங்களை இலங்கை இராணுவத்திற்கு வழங்குவதற்காக இரகசியமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டமையும் எமக்குக் கவலை அளிக்கின்றது.

இதனால் அமெரிக்கா முதலில் இது போன்ற நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என தாழ்மையுடன் வேண்டுகிறோம் அத்துடன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் போது தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி அறிவதற்கு எமது ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து கலந்துரையாடவேண்டும்" என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்ற மகஜர் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினாலும் கையளிக்கப்பட்டது.

## இருவர் கைது

(மன்னார்)

மன்னார் சிறுத்தோப்பு என்ற இடத்தில் புகையிரதத் தண்டவாளத்தை களவாகக் கழற்றிய சமயம் பேசாலைப் பொலிசாரால் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனார்.இவர்கள் அரச உடமைகளைச் சேதமாக்கினர் என்ற குற்ற சாட்டின் பேரில் பொலிசாரால் நேற்று நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்பட்டனர். (மி)

## யாழ். மக்களின் பிரச்சினைகள் குறித்து பொது அமைப்புக்கள் ஆராயும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தினர் ஆராயவுள்ளனர். சம காலத்தில் யாழ். மாவட்ட மக்கள் அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் ஒன்றுகூடல் எதிர்வரும் முதலாம் திகதி யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினரது நடுவப்பணியகத்தில் இடம்பெறவுள்ளது. (33)

## கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் ஒரு லட்சம் மாணவர்கள் விலகல்

யாழ். குடாநாட்டு பாடசாலைகளிலிருந்து கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் விலகியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

1994, 95ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் குடாநாட்டில் இடம்பெற்ற பாரிய படை நடவடிக்கைகள், அதைத்தொடர்ந்துஇடம்பெற்ற பாரிய இடப்பெயர்வு மற்றும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கைதுகள், காணாமல் போதல் போன்ற பல்வேறு சம்பவங்களினால் இந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற யாழ். அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில் இந்தப் பாரிய பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டின் முக்கியமான வளமாக காலாகாலமாக கருதப்பட்டு வந்த கல்வி வளம் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், குடாநாட்டு அபிவிருத்திக் குழுக் கூட்டம் நீண்ட காலம்நடைபெறாமல்ஒத்திப் போடப் பட்டுவருவது தொடர்பாகவும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது.இக்குழுவுக்கு இன்னமும் ஒரு தலைவர் நியமிக்கப்படாமை குறித்து இங்குவிவாதிக்கப் பட்ட துடன், அனேகமாக சிறிலங் காவின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அரசாங்கம் இப்பத விக்கு நியமிக்கலாம் என்றும் கருத் துத் தெரிவிக்கப்பட்டது. எனினும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இக்கூட்டம் படைமுகாம் ஒன்றிலோ அல்லது கட்சிக் காரியாலயத்திலோ இடம் பெறுமானால் அதில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை எனக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## வல்வைப் பாலம் மோசமான நிலையில்

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வல்வைப்பாலம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் தற்போது அது சீர்திருத்தம் செய்யவேண்டிய நிலையில் உள்ளது.இதனால் பயணிகளின் போக்குவரத்து மிகவும் சிரமமான நிலையில் உள்ளது. இப் பாலத்தின் அகலம் மிகவும் குறைவு அத்துடன் இரு பக்கங்களிலும் இராணுவ



காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளமை யால் போக்குவரத்தின் போது வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் அதிகளவு விபத் துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இதேவேளை மாரி காலத்தில் இப்பாதையின் போக்குவரத்துகள் முற்றாகத் தடைப் படக் கூடிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (36)

## யாழ். குடாநாட்டில் மழை நீரைச் சேகரித்து குடிநீர்ப் பிரச்சினையைக் குறைக்கத் திட்டம்

யாழ். குடாநாட்டில் குடிநீர்த் தட்டுப்பாடு பெருமளவில் நிலவும் பிரதேசங்களில் மழை நீரைச் சேகரிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், மழை நீர்ச் சேகரிப்புத் தொட்டிகளை நிறுவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கை மழை நீர்ச் சேகரிப்பு அமையம் யாழ்ப்பாணம் நீர்ப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்துடனும், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இணையத்துடனும் இணைந்து இத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், சங்கானை பகுதிகளில் கூடியளவில் குடிநீர்ப் பிரச்சினை எதிர்கொள்ளப்படுகின்றது. அத்துடன் புங்குடுதீவு, எழுவை தீவு, அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் காரைநகர் , ஊர்காவற்றுறைப் பகுதிகளில் முதற்கட்டமாக 12 மாதிரி மழை நீர்ச் சேகரிப்புத் தொட்டிகளை நிறுவமுடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி மழை நிர்ச் சேகரிப்புத் தொட்டிகளை அமைக்கும் பணியில் ஈடுபடவுள்ள மேசன் தொழிலாளர்களுக்கு வதிவிடப் பயிற்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. திருநெல்வேலி, விவசாய ஆராய்ச்சி பயிற்சிக் கல்லூரியில் இப் பயிற்சி நெறி இடம் பெறவுள்ளது. (27)

### விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி,கைதடி, கொடிகாமம் பகுதிகளில் இயங்கி வரும் அஞ்சலகங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களைத் தென்மராட்சி பிரதேச செயலகத்திலும் அஞ்சலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் மேலதிக விபரங்களை விண்ணப்பப்படிவங்களைப் பெறும் இடங்களில் தெரிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(28)



யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம் கொழும்பு ஜெயாபுக் சென்ரரின் அனுசரணையுடன் நேற்றுக் காலை பல்கலைக்கழக வணிகத் துறை விரிவுரை மண்டபத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தது. கண்காட்சி மண்டபத்தினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் அவர்கள் நாடாவினை வெட்டித் திறந்து வைப்பதனை படத்தில் காணலாம். (படம்-செல்வா)

## - இரத்தினபுரி மாவட்டத்தில்- 100க்கும் குறைவான மாணவர்களுடன் 100 பாடசாலைகள் இயங்குகின்றன.

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் சுமார் 100 பாடசாலைகள் 100இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்டு இயங்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் சுமார் 50 பாடசாலைகள் 50 இற்கு குறைவான மாணவர்களையும், 10 பாடசாலைகள் 20இற் குக் குறைவான மாணவர்களையும் கொண்டுள்ளன.

இந்தவகையில் இம் மாவட்டத்திலுள்ள பெரும் பான்மையினைப் பாடசாலைகளில் அதிக வளம் இருந்தும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அல்லது முற்றாக மாணவர்கள் இல்லாத நிலையில் இப் பாடசாலைகள் மூடப்படும் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை தமிழ் மொழி மூலப் பாடசாலைகள், வளங்கள் இல்லாது மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்குகின்றது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# போதிய பேருந்துகள் இன்மையால் பூரண சேவையாற்ற முடியவில்லை

## கோண்டாவில் சாலைப் பணிப்பாளர் ஆதங்கம்

போதிய பேருந்துகள் இன்மையால் மக்களுக்கு பூரண சேவையை வழங்கமுடியாது இருப்பதாக கோண்டாவில் பேருந்து சாலை பணிப்பாளர் தெரிவித்திருக்கிறார். “ மக்கள்



சீரான போக்குவரத்து” சேவையைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை அறிந்துகொள்ளும் முகமாக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், கோண்டாவில் சாலைக்குச் சென்று சபையின் பணிப்பாளர் கணேச பிள்ளை தலைமையில் அனைத்துப் பிரிவுத்தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது பல்வேறு சிரமங் களுக்கு மத்தியில் பூரண சேவையை வழங்கியும், மக்களின் நல்லாதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமைகளை சபையின் பணிப்பாளர் வெளிப்படுத்தினார்.

இலங்கையில் உள்ள 93போக்குவரத்துச்சபைகள் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இருந்தும் தங்கள் சபையின் ஊழியர்களது சிறந்த சேவைகள் காரணமாக இற்றைவரை மத்தியபோக்குவரத்துச் சபையின் கீழே தங்களது சபையும் இருந்து வருவதாகவும், ஆனால் மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் உள்ள ஏனைய சபைகளுக்கு கிடைக்கின்ற சலுகைகள் தங்களுடைய சபைக்குக் கிடைப்பதில்லை என்றும், இச்சபையின் கீழ் இயங்கும் பேருந்து நிலை யங்களின் பாவனைக்கென 164 பேருந்துகள் தேவைப் படுவதாகவும், தற்போது மக்கள் பாவனைக்கென 127 பேருந்துகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவ தால் மக்களுக்குரிய பூரண சேவையை வழங்கமுடியாமல் இருப்பதாகவும் குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்குரிய சேவையை திருப்திகரமாக நடாத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

வேலைத்தளத்தில் 16 வரையிலான வண்டிகள் இயந்திரங்கள் இல்லாமல் ஆனால் நல்ல மேலமைப் புக்களை கொண்டவையாகத் தரித்துநிற்கின்றன. இவற்றுக் கான இயந்திரங்கள் பொருத்த ஒவ்வொரு வண்டிக்கும் தலா ரூபா 10இலட்சம் வரையில் தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது எங்களுடைய சபை நட்டத்தில் இயங்கி வருவதால் இயந்திரங்களை சபையின் மூலம் நிதியைப் பெற்று பொருத்த முடியாமல் இருக்கின்றது. இவ் வண்டிகளுக்குரிய இயந்திரங்களைப் பொருத்த உதவிகள் கிடைத்து பொருத்தப்படும் இடத்து ஆகக் குறைந்தது. பாடசாலை மாணவர்களுக்காவது நல்ல சேவைகளை வழங்க முடியும். மொத்தத்தில் 37 வண்டிகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அண்மையில் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தை தமது சாலை யில் உள்ள பொறியியலாளரின் துணைகொண்டு தமது சாலையிலேயே 20 நாட்களுக்குள் திருத்தம் செய்து சேவையில் ஈடுபடுத்தியதாகவும் குறிப்பிட்டார்கள்.

கடந்த காலங்களில் 40 புதிய வண்டிகளைத் தருவதாக போக்குவரத்து அமைச்சினால் கூறப்பட்டபோதும் இற்றை வரை அவை கிடைக்காமை, சபையின் அன்றாட வருமானம் ரயர், எரிபொருள் செலவுகளுக்கே போதாமல் இருக்கின் றமை சபைக்கென போதிய வசதிகள் கொண்டவேலைத் தளம் ஒன்று இல்லாமை, மத்திய வேலைத்தளம் அநுராத புரத்தில் இயங்கி வருவதால் எமது சபையின் வண்டிகளை அநுராதபுரத்திற்கு எடுத்துச்சென்று திருத்துவது கடின மாகையால் தங்களது சாலையில் மாகாண வேலைத் தளத்தை உரிய வசதிகளுடன் ஆரம்பித்தால் உரிய காலங் களிலேயே திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசினால் கடந்த காலங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.1200,1000 ஆகிய் கொடுப்பனவுகள் தங்கள் சபையில் ஊழியர்களுக்கு வழங்கப்படாமை இன்னும ஐம்பது வரையிலான வண்டிகளும், உரிய வசதிகள் கொண்ட வேலைத்தளம் ஒன்றும் உடனடியாகத் தேவைப்படுகின்றமை ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்கள் கையளித்தார்கள். இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன் மேற்படி பிரச்சினைகள் சம்பந்தமாக உரிய இடங்களில் தொடர்புகொண்டு தம்மால் இயன்ற நடவடிக்கையை மேற்கொள்வதாகக் கூறினார்.

# புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க வடக்கு-கிழக்கில் நிர்வாகக் கட்டமைப்பு அவசியம்

## -உலகவங்கி வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரல்ட்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம் தேவையென உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரல்ட் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தம் நிரந்தரமாக அமைகின்ற வேளை நாடு முழுவதிலும் அபிவிருத்திப் பணிகளுக்கு உலகவங்கி உதவி வழங்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை பற்றியும் அதற்கான உதவி வழங்கல் திட்டங்கள் பற்றியும் விளக்கமளிக்கும் மாநாடு ஒன்று கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் அவர் கலந்து கொண்டு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் உலகவங்கியின் தெற்காசியப் பிராந்திய உதவித் தலைவர் பிரபுல்பட்டேல் உட்பட வங்கியின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற வுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளைப் பொறுத்தே உலகவங்கியும் நிதியுதவிகளை வழங்கும் அது குறித்து சிறிலங்கா அரசாங்கத்திற்கு நாங்கள் தெரிவித்திருக்கின்றோம்.

நிதியுதவி வழங்கும் நாடுகள் கூட அவ்வாறுதான் கூறியுள்ளன. மனிதாபிமான உதவிகளைத் தவிர அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவிகள் எதுவும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தற்போதைக்கு வழங்க முடியாது.

அதேவேளை வட-கிழக்கு மாகாணத்திற்கு நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று தற்போது அவசியம் தேவைப்படுகின்றது. அந்த நிர்வாகக் கட்ட மைப்பின் மூலமே அங்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன் னெடுத்துச் செல்ல முடியும் என்றால் இது பற்றி நாங்கள் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறியுள்ளோம். உலக வங்கி உட்பட நிதி உதவி வழங்கும் நாடுகள் வழங்குகின்ற நிதிகளைக் கையாள வட-கிழக்கு மாகாணத்தில் அதிகாரமுள்ள நிர்வாக அமைப்பு ஒன்று அவசியம் என்று புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். அரசாங்கத்தின் மூலமாக உதவிகள் பெறப் படுவதைப் புலிகள் விரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு விளக்கமளித்த உலக வங்கியின் தெற்காசியப் பிராந்திய பிரதித் தலைவர் பிரபுல் பட்டேல் அரசாங்கமும் புலிகளும் மிக விரை வில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். நோர்வேயின் சமாதான ஏற்பாட்டை இரு தரப்பும் நன்கு பயன்படுத்த வேண்டும் அமைதி ஏற்படாமல் சர்வசேத உதவிகளை இரு தரப்பும் எதிர்பார்க்க முடியாது. மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கு இரு தரப்பும் இடமளிக்க மாட்டாது. சனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்த வேளை அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் அக்கறையாக உள்ளதை அறிந்து கொண்டேன் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டென அவர் மேலும் தெரிவித்தார்.

### 21 பேருக்கு அபராதம்

(மட்டக்களப்பு)

சட்டவிரோதமான முறையில் இரவுவேளையில் வீதி மின்கம்பிக ளிலிருந்து மின்சாரம் பெற்ற 21 பேர்ரைக் கல்முனைப் பிராந்திய மின் அத்தியட்சகர் பத்மநாதன் தலைமையிலான குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். கடந்த புதன் கிழமை இவர்கள் இக்குழுவினால் பிடிக்கப்பட்டனர். இவர்களில் 08 பெண்களும், 13 ஆண்களும் அடங்குகின்றனர். இவர்களைக் கடந்த வியாழக்கிழமை கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த வேளை ஒவ்வொருவரும் 5000 ரூபா செலுத்தவேண்டுமென அக் கரைப்பற்று மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

### கற்றல் உபகரணம் வழங்கல்

வட்டக்கச்சி பிரதேசப் பாட சாலைகளில் கல்விபயிலும் தாய் அல்லது தந்தையரை இழந்த பிள் ளைகளுக்கு கிளி.கிழக்கு புனர் வாழ்வுக்கழகம் கற்றல் உபகர ணங்களை வழங்கி வருகின்றது (12)

# மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி; வெற்றி பெற்றோர் கௌரவிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கலைவாணி சவாரி விளையாட்டுத்திடலில் தமிழீழ விளையாட்டுத்துறை மற்றும் கிளி.மாவட்ட மாட்டு வண்டிச் சாவரிச்சங்க அனுசரணையுடன் வட்டக்கச்சி இராமநாதபுர விவசாயப் பெருமக்களால் மாபெரும் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் ஆரம்பமா கியது. மங்கல விளக்கினை தமிழீழ காவல் துறையின் வட்டக் கச்சிப் பிரதேசப் பொறுப்பாளர் சுந்தரலிங்கம் மற்றும் கிளி.மாவட்ட சவாரிச்சங்க துணைத்தலைவர் அ.ஜயம்பிள்ளை ஆகியோர் ஏற்றி னர். தேசியக் கொடியினை வட்டக் கச்சி வலயப் பொறுப்பாளர் இளை யவன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து சவாரிப் போட்டிகள் அ.ஆ.இ.ஈ. என நான்கு பிரிவுக ளாக நடைபெற்றது.

அ.பிரிவில் 1ஆம் இடம் ம.தேவன் புளியம் பொக்கணை, 2ஆம் இடம் த.முகுந்தன் வட்டக் கச்சி, 3ஆம் இடம் அ.ரவி பன்னங் கண்டி,

ஆ.பிரிவில் 1ஆம் இடம் சி.பாலன் வட்டக்கச்சி, 2ஆம் இடம் ப.ரதுசி விசுவமடு, 3ஆம் இடம் க.சிறி[illegible]ன் பூநகரி,

இ.பிரிவில் 1ஆம் இடம் க.ரமே[illegible] காந்தன் பன்னங்கண்டி, 2ஆம் இடம் த.ஜெகன் புளியம் பொக்கணை, 3ஆம் இடம் கோ.[illegible]மல் வட்டக்கச்சி,

ஈ.பிரிவில் 1ஆம் இடம் க.ரமேஸ்காந்தன் பன்னங்கண்டி, 2ஆம் இடம் இ.பத்மநாதன் வட்டக்கச்சி, 3ஆம் இடம் சி. கண்ணன்.புளியம் பொக்கணை,

ஆகியவர்களின் காளைகள் கேடயங்களைப் பெற்றுக் கொண்டன. (12)

# தார் இடப்பட்ட பிரதான வீதிகளுக்கு கிரவல் போடப்படுவதால் பயனில்லை!

## பயணிகள் நாளாந்தம் பெரும் அவலம்

(முல்லை)

முல்லைத்தீவு நாயாற்று வீதிக்கு கிரவல் போன வருடம் போடப்பட்டது தற்போது கிரவல் மண்ணெல்லாம் அகன்று வீதி மோச மாக இருப்பதால் மக்கள் போக்கு வரத்துக்கு பெரும் இடையூறாக இருக்கின்றது.

இவ்வீதி தார் வீதியாக எப்போது மாற்றப்படும் என மக்கள் கவலை தெரிவித்தனர்.

நீண்டகாலமாக கிரவல் பரவியே வீதியை அமைத்திருந்தத னால் பாடசாலை மாணவர்கள் முதல் உத்தியோகத்தர்கள், நோயா ளிகள் வரை அனைவரும் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள் கின்றமையை அவதானிக்க முடிகிறது.

1990 ஆம் ஆண்டிற்கு முன்பு தார் போட்ட வீதியாகவே இது இருந்தது. மக்கள் பெருமளவாகக் குடியேறி வருகின்ற போதும் இவ் வீதி புனரமைக்காததனால் போக்கு வரத்துச் செய்ய முடியாது தற் போது புழுதியும் கல்லுமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (20)

# மஞ்சள்கொடி குளத்தை புனரமைத்து விவசாய நடவடிக்கைக்கு உதவி செய்க!

## மீளக்குடியேறும் மக்கள் வேண்டுகை

வவுனியா கொல்லர் புளியங் குளம் பகுதியில் மிகவும் தொன் மையான குளம் மஞ்சள் கொடிக் குளம் இக்குளம் 1945 ஆம் ஆண்டுக்குப் பிறகு பல அசம்பா விதங்களால் புனரமைப்பு பணி இடம் பெறாமல் அந்த இடத்தில் ஓர்குளம் இருந்ததா? என்பது கூடத் தெரியாமல் பற்றைக் காடுகள் வளர்ந்து இருக்கின்றன.

குளம் நன்றாக இருந்த வேளையில் அப்பகுதி மக்கள் 900 ஏக்கர் வயல் காணிகளில் தங்கள் வேளாண்மைப் பயிரினைச் செய் திருக்கிறார்கள் ஆனால் இப்போது அந்த வயல் நிலங்களிலும் பற்றை கள் நிறைந்து காணப்படுகின்றன.

மக்கள் யுத்தத்தினால் பல் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து தற்போது தங்கள் கிரா மங்களில் மீளக் குடியமர்ந்து கொண்டு வருகின்றார்கள். இப் பகுதி மக்களின் முக்கிய தொழில் விவசாயம். அதை தங்கள் ஊரில் மேற்கொள்ள முடியாததால் அரு கிலுள்ள பழையவிளாங்குளம், மன்னகுளம், புதுவிளாங்குளம், குஞ்சுக்குளம், கனகராயன்குளம் போன்ற இடங்களுக்குச் சென்று வயல் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. அப் பகுதி மஞ்சள்கொடி குளத்தை புன ரமைத்தால் மக்களின் தேவையை பூர்த்தி செய்து மீள்குடியேற்றங் களை உறுதிப்படுத்த முடியும்.




# முன்னணி வீரர்களுக்கு ஏமாற்றம்;



உலகமே ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் 28ஆவது ஒலிம்பிக் போட்டிக்கு இன்னும் 24 நாட்களே எஞ்சியுள்ளன.

இதற்கிடையில் இப்போட் டியில் பங்கேற்கும் தகுதியைப்பெற தகுதிகாண் போட்டிகள் அந்தந்த நாடுகளில் நடைபெற்று வருகின் றன.

அதிக வீரர்களைப் பிரதிநிதித் துவப்படுத்தி முன்னணி வகிக்கும் நாடுகளான அமெரிக்கா, அவுஸ் திரேலியா போன்ற நாடுகள் முன் னணி வீரர்கள் பலரைத் தகுதி காண் போட்டியில் இழந்துள் ளதுடன் பலர் ஊக்கமருந்து குற்றச் சாட்டுக்குள்ளாகி ஒலிம்பிக் போட்டி யில் பங்கேற்கும் வாய்ப்பை இழந் துள்ளனர்.

இதில் அமெரிக்காவின் மெய் வல்லுநர் தம்பதிகளான மரியன் ஜோன்ஸ், மொண்ட்கொமரி ஆகி யோரின் தகுதிஇழப்பு குறிப் பிடத்தக்கதாகும்.

2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டநிகழ்வில் தங்கம் வென்ற மரியன்ஜோன்ஸ், இம் முறை 100 மீற்றரில் தகுதிகாண் போட்டியில் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்ததுடன் 200 மீற்றரில் உடற் சோர்வைக் காரணம் காட்டி இறுதி நேரத்தில் விலகிக்கொள்ளப்பட்ட நிலையில் நீளம் பாய்தலில் மாத்திரமே அவருக்கு ஒலிம்பிக் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

மரியன் ஜோன்ஸின் கண வரான மொண்ட் கொமரிக்கும் 100 மீற்றர் தகுதிகாண் போட்டியில் நான்காவது இடமே கிடைத்த தால் ஒலிம்பிக்போட்டியிலிருந்து வெளியேற வேண்டியநிலை ஏற்பட்டது.

முதலாவது இடத்தை, மூன்று முறை உலக சாம்பியன் பட்டத்தை வென்ற மொரீஸ் கிறீன் பெற்றார். இது அமெரிக் காவுக்கு ஆறுதலளிப்பதாக அமைந்துள்ளது. அவர் 100 மீற்றர் தூரத்தை 9.91 வினாடிக்ளில் கடந்தார். அவரைத் தொடர்ந்து ஜஸ்டின்காட்லின் 9.92 வினா டிகளில் கடந்து இராண் டவது இடத்தைப்பிடித்தார் ஹான் கிரா.:.போடு 9.93 வினாடிகளில் கடந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இதுவரை கார்ல் லீவிஸ் மட் டுமே இருமுறை ஒலிம்பிக்கில் தொடர்ந்து பட்டம் வென்றுள்ளார்.



மொறிஸ்கிறீன்

## பதக்கம் வெல்வாரா மொறிஸ் கிறீன்



மரியன்ஜோன்ஸ்

கடந்த இரு வருடங்களாக காயங்களால் அவதிப்பட்டு வந்த கிறீன் இதுவரை 100 மீற்றர் தூரத்தை 47 தடவை 10 வினாடி களுக்குள் கடந்திருக்கிறார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நிலைமை நன்றாக இருந்தது. கடந்த இரு ஆண்டுகள் மேலும் மிகக் கடினமான சூழ்நிலையை சந்திக்க வேண்டியிருந்தது.ஆனால் நான் விட்டுவிடவில்லை என்கிறார் கிறீன்.

30 வயதாகும் கிறீன் ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில் முன்னணி வீரர் கள் சிலர் இல்லாது போனாலும் அமெரிக்கா பதக்கங்களைக் குவிக்கும் என்கிறார்.

நீங்கள் வெற்றி பெறமுடியாது என்று நம்பினால் உங்களால் வெற்றி பெறமுடியாது. எதென்சில் பதக்கம் வெல்வதே குறிக்கோள். வீரர்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன் சிறப்பாக செயற்பட்டால் தங்கம்,வெள்ளி, வெண்கலம் என அனைத்துப் பதக்கங்களையும் வென்று விடு வோம். 100 மீற்றர் தொடர் ஓட்டத்திலும் வெற்றி பெறுவோம். ஓடும்போது பட்டனைக் கீழே போட்டுவிட்டால் மாத்திரமே தோல்வி அடைவோம் என்கிறார் கிறீன்.

இதனைவிட இதுவரை இருந்த ஓட்டப்பந்தய வீரர்களிலேயே சிறந்தவர் என்ற பெருமையைப் பெற விரும்புகின்றார் கிறீன்.

ஆனால் புதிய வீரர் ஒருவர் வந்து தனது சாதனையை முறி யடிப்பார் என்பதை ஒத்துக் கொள்ளும் கிறீன் அதுவரை தான் சிறந்த வீரர் என்கிறார்.

# நாமும் சளைத்தவர்களல்ல

தற்போது சிறிலங்காவில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஆரம்ப லீக் போட்டிகள் முடிவடைந்துள்ளன. பிராந்தியத்தின் பலமான அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் போட்டிகளை சந்திக்கத் தயாராகின்றன.

இந்நிலையில் நடந்து முடிந்த லீக் போட்டிகளை அவதானிக்கும் போது இத் தொடருக்கு அறிமுகமான அணிகள் என்ற வகையில் ஐக்கிய அரபு எமிரேட்சையும் (U.A.E)ஹொங்கொங்கையும் குறிப்பிடலாம்.



இவ்விரு அணி களும் மிகப் பலம் வாய்ந்த அணி களு டன் மோதின. ஆயினும் தோல்வி யடைந்தன.

எனினும் ஐக்கிய அரபு எமி ரேட்ஸ் அணியைப் பொறுத்த வரை இப்போட்டிகள் அதற்கு வெற்றியே. காரணம் அது எதிர் கொண்ட அணிகள் மிக அதி கமாக ஓட்டங் களைக் குவிக்கும் என்றே எண்ணத் தோன்றியது. ஆயினும் அவ் வணி வீரர்களின் களத்தடுப்பும் பந்து வீச்சும் எதிரணிகளின் கனவை சிதறடித்து விட்டது. அவ்வணி சந்தித்த இரு பலம்மிக்க அணிகளையும் குறிப்பாக சிறிலங்காவை 50 ஓவர்களில் 239 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தியமை சிறப்பம்சமாகும். அத்துடன் 10 வீரர்களையும் ஆட்டமிழக்கச் செய்தமை மேலும் சிறப்பாகும். அதே போன்று இந்திய அணியையும் 260 ஓட்டத்துக்குள் மட்டுப்படுத்தியமை. நேற்று நடைபெற்ற போட்டியில் இந்திய அணியின் களத்தடுப்பையும் பந்து வீச்சையும் ஒப்பிடும் போது இதன் சிறப்பு தெளிவாகும். இதே வகையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பந்து வீச்சு, களத்தடுப்புப் போன்று துடுப்பாட்டத்திலும் சிறந்து விளங்கிட பயிற்றுவிப்பாளர் இந்தியாவின் முன்னாள் சகல துறை ஆட்டக்காரரான றொபின்சிங் ஒத்துழைப்பாரெனில் எமிரேட்ஸ் அணிக்கு சிறப்பான எதிர்காலம் உண்டு.

# இவர்களும் புகழ் மிக்கவர்களே

யூரோ-2004 கால்பந்துப் போட்டி களில் கிண்ணத்தைக் கைப்பற்ற தரம் வாய்ந்த இங்கிலாந்து, பிரான்ஸ் அணிகள் தவறி விட்டாலும் அவ் அணிகளின் வீரர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்த வகையில் இங்கிலாந்தின் வெயின்றூனியும், பிரான்சின் தியரி கெனிரியும் சிறந்த வீரர்கள் என்பதை மறுக்கமுடியாது. அவர்கள் இருவரிடமுமே சிறந்த ஆற்றலும் நிகரற்ற துடிப்பும் காணப்படுகின்றன. எல்லாப் போட்டிகளுமே வெற்றியையும் தோல்வியையும் தருவது மறுக்க முடியாதது. இவர்கள் தோல்வியைச் சந்தித்தாலும் இவர்களின் ஆட்டம் மகத்தானதே.

உலகின்



ஏனைய வீரர்களான பெக்காம், நிஸ்ல் லாசன்ஸ் போன்றவர் இவர்களது திறமை போட்டிகளில் காணப் பட்டது. இவர்களின் திறமைகள் மன தைக் கவர்வனவாகவே இருந்தன.

சிடான், றீரயிஸ், களைப் போலவே மயும் யூரோ-2004

கால்பந்துப் போட்டிகளில் வெற்றியை நிர்ணயிப்பது வீரர்களின் உதைப்பு,பந்தை இலக்கு நோக்கிக் கொண்டு செல்லுதல், எதிரணி வீரர்களிடமிருந்து பாதுகாப்பது போன்ற திறன்களிலேயே தங்கியுள்ளது. இந்த வகையில் ஹென்றி யும்,றூனியும் சிறப்பானவர்களே. ஹென்றியையும், றூனியையும் பொறுத்தவரையில் அவர்களது கடும் பயிற்சி முடிந்த யூரோ கிண்ணத்துக்குப் பயனற்றுப் போயுள்ளது. ஹென்றி மட்டும் இதற்குக் காரணமாகவில்லை. 1998ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் போது அவர் திறம்பட ஆடினார். அதன் பின்னர் அவர் காயங்காரணமாக சிறிதுகாலம் போட்டிகளிலிருந்து ஒதுங்கியிருந்தார்.றூனி 18 வயது இளம் வீரராக இருந்தாலும் இங்கிலாந்து அணியில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறார். இவர் யூரோ-2004 தொடரில் நான்கு கோல்களைப் போட்டார். பெக்காமைப் போலவே இளைஞர் முதல் முதியோர் வரை இவரின் ரசிகர்களாயினர். பெக்காமும் அவரை வரவேற்றிருக்கிறார். பெக்காம் தற்போது கொடிகட்டிப் பறப்பதுபோல எதிர்காலத்தில் இவரும் சிறந்துவிளங்குவார் என்பதில் ஐயமில்லை.



நடநந்து உண்மையில்

(வடிவேல்)

# ஏற்றுமதிக் கோட்டாமுறை நீக்கத்தால் 1.5 இலட்சம் தொழிலாளர் வேலையிழப்பு

## -தொழிலாளர் நல இயக்கம் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஏற்றுமதி கோட்டாமுறை நீக்கப்பட்டால் ஆடைக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சத்து 50ஆயிரம் ஊழியர்கள் வேலை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என அரசுக்குத் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆடைத் தொழிற்சாலைகளுக்கான ஏற்றுமதிக் கோட்டாமுறை எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. இதையடுத்து ஒன்றரை இலட்சம் ஊழியர் வேலை இழப்பர். 35சதவீதமான ஆடைத்தொழிற்சாலைகள் முடங்கிவிடும். ஏழைக்குடும்பங்கள் பரிதவிப்புக்குள்ளாக நேரிடும் என்றும் இந்த இயக்கம் விளக்க மளித்துள்ளது.

கோட்டாமுறை நீக்கம் தொடர்பாக கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் தான் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்படி தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் இவ்விளக்கத்தை அளித்தது.

கோட்டா முறை நீக்கத்தால் ஏற்படும் பாரதூரமான பாதிப்புக்களை இவ் இயக்கம் இதில் மிக விரிவாக எடுத்துரைத்தது.

இவ் இயக்கத்தின் சார்பில் பிரிட்டோ பெர்னாண்டோ பின்வருமாறு விவரித்தார். ஆடைக்கைத் தொழிற்துறை சிறிலங்காவின் ஏற்றுமதியில் 53சதவீத பங்களிப்பை நல்குகின்றது. பொதுவாக மொத்தம் 3இலட்சத்து 20 ஆயிரம் ஊழியர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றார்கள். இத்துறையில் ஏற்றுமதிக் கோட்டா நீக்கம் நடுத்தர ஆடைத்தொழிற்சாலைகளையே பாதிக்கும். டிசம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் இவற்றிற்கு மூடுவிழா நடத்த வேண்டியநிலை ஏற்படும். நடுத்தர ஆடைத்தொழிற்சாலைகளில் ஒன்றரை இலட்சம் ஊழியர்கள் பணி புரிகிறார்கள். இவர்கள் தொழிலை இழந்து நிர்க்கதிக்குள்ளாக நேரிடும்.

அதேவேளை இத்துறை மூலம் 47 சதவீதமான அந்நிய செலாவணி ஈட்டப்படுகிறது. கோட்டா நீக்கம் நிச்சயம் 235 முதல் 250வரையிலான சிறிய நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகளை முடக்கி இல்லாதொழித்துவிடும். இதனால் வெளிநாடுகளில் நிறுவப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைகளும் ஆட்டங்கண்டுவிடும்"

# பொதுமக்கள் மீதான தாக்குதல்; 10 படையினரைக் கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

கொழும்பின் புறநகரான மத்தேகொட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் 10 இராணுவத்தினரைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இராணுவத்தினர் 10 பேரும் பொதுமக்கள் மீது தனிப்பட்ட காரணங்களை முன்வைத்து தாக்குதல் நடத்தினர்.அத்துடன் வீடுகள் சிலவற்றுக்கும் சேதம் விளைவித்தனர். இது தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு வந்த சிறிலங்கா காவல்துறையினர், இராணுவ காவல்துறையினருடன் இணைந்து விசாரணைகளை நடத்தியே குறிப்பிட்ட 10 பேரையும் கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(32)

# ரணில் விக்கிரம சிங்கவை இராஜினாமாச்செய்ய ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்து

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யுமாறு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அல்மொன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய கட்சித் தலைவராக தற்போதைய பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவு செய்யப்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எதிர்கட்சித் தலைவரான ரணில் விக்ரமசிங்க தனது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வதற்கு மறுப்பாரேயானால், அவருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒரு நடவடிக்கையாக கட்சி மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அல்மொன் பீரிஸ் தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்க தான் எதிர்கொண்ட 17 தேர்தல்களில் 15 தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்துள்ள அல்மொன் பீரிஸ், தலைமைப் பதவியை எவ்வாறு தக்கவைப்பது என்பதைக்கூட அறியாதவர் அவர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரதம நீதியரசரை விசாரிக்க குழு அமைக்க இணக்கம்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு பாராளுமன்ற யாப்பு விதிகள் 94,95, 96, இற்கு அமைய பாராளுமன்ற குழு ஒன்று நியமிக்கபடுவதற்கு எதிர்க்கட்சிகள் உடன்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு அதிகபெரும்பான்மை பாராளுமன்றத்தில் இல்லாதபடியால் இக்குழுவின் தலைவர்பதவிக்கு எதிர்க்கட்சிகளின் சார்பில் ஒருவரை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர் மீதான இக்குற்றச்சாட்டின் உண்மை நிலையை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதமநீதியரசர் பெண்ணொருவருடன் சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றங்களை விசாரணை செய்து முடியும் வரை அவர் உயர் நீதிமன்றத்தில் இருந்து வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்குவது மிகவும் வெட்கக்கேடான செயல். ஆகவே இவரின் குற்றவிசாரணை முடியும் வரை இவர் உயர்நீதி மன்றம் செல்லக் கூடாதென சனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன்பர்னாந்து அறிவித்துள்ளார்.

# போலி அடையாள அட்டைகளால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## -சிறிலங்கா புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

போலி தேசிய அடையாள அட்டைகளால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு மிகப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறையின் உயர் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட பெண் தற்கொலைக் குண்டுதாரி போலி தேசிய அடையாள அட்டையொன்றை வைத்திருந்ததாகவும், அதனைப் பயன்படுத்தி அவர் பல்வேறு இடங்களுக்கு வெற்றிகரமாகச் சென்று வந்ததாகவும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

போலி அடையாளஅட்டை மோசடியுடன் ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர் சிலரும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக மருதானையைச் சேர்ந்த மொகமட் ஏ.றி வைடீன், கல்கிசையைச் சேர்ந்த கே. குணரட்ண பெர்னான்டோ, வியாங்கொடயைச் சேர்ந்த இந்திரஜிநந்தன கருணா நாயக்கே மற்றும் பாணந்துறையைச் சேர்ந்த மொகமட் முபாறக்- மொகட் றஷ்வன் ஆகிய நால்வரும் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதம நீதவான் சறோஜினி குசலவீரவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்த போது நீதவான் இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

இவர்கள் நால்வருக்கெதிராகவும் குண்டு தாரிக்கு போலி அடையாள அட்டை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து தாயகம் திரும்ப 600 பேர் காத்திருப்பு

(கொழும்பு)

குறைந்தது அறுநூறு வரையான இலங்கைத் தொழிலாளர்கள் ஆதரவற்றவர்களாக விடப்பட்ட நிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் 'பாதுகாப்பு இல்லங்களில்' தங்கியிருப்பதாக சிறிலங்காவின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பணியகத் தலைவர் இது குறித்துத் தெரிவிக்கையில்; "இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து யூலை-5ஆம் திகதி வரை மத்திய கிழக்கு நாடுகளில் பாதிப்பிற்குள்ளானத்இலங்கைத் தொழிலாளர்களைத்திரும்ப நாட்டிற்குஅழைத்து வருவதற்குப் பணியகம் விமானப் பயணச் சீட்டுக்களுக்கென எட்டு மில்லியன் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

பதினொருபேர் அபுதாபியிலும், மூவர் டுபாயிலும்,191 பேர் றியாத்திலும், எட்டுப் பேர் ஜெட்டாவிலும், 45 பேர் ஜோர்தானிலும், 392 பேர் குவைத்திலும், 45 பேர் லெபனானிலும், மூவர் ஓமானிலும் தாயகம் திரும்பும் நம்பிக்கையுடன் பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ளனரென பணியகத்தின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.


க.வ.ப.நோ.கூ.சங்கம், பரந்தன்

வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடுதல்

தருமபுரத்திலுள்ள கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது இவ் உற்பத்தி நிலையத்தை குத்தகைக்குப் பெற விரும்புவோர் எதிர்வரும் 2004.08.05ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை தலைவர், கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:-
விண்ணப்பத்தினை தாங்களே தயாரித்து மாதாந்தக் குத்தகைப் பெறுமதியினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச,
பரந்தன்.

(சி-9756)



வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம்:- 2004 ஜீலை 19 முதல் 29 வரை
நேரம்:- தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம்:- யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

❋ சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழுங்கப்படும்.
❋ பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழுங்கப்படும்.
❋ மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழுங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)

# இந்.பாக் –வெளியுறவு அமைச்சர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்திய- பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் நேற்று நடைபெற்றது.

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான " சார்க்" வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு இன்று பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெறுகின்றது. இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக நேற்று வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதில் பங்கேற்பதற்காக இந்திய வெளியுறவுத்துறையமைச்சர் நட்வர்சிங் நேற்று பாகிஸ்தானுக்கு பயணமாகியுள்ளார்.

நட்வர்சிங் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது கசூரியை நேற்று சந்தித்த வேளை இந்திய-பாகிஸ்தானின் எல்லைப்பிரச்சினை,தீவிரவாதிகளின் ஊடுருவல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேச்சு வார்த்தையினை நடத்தியுள்ளனர்.

# அமைச்சர் சிபிஸ் தோரனைக் கைதுசெய்ய இந்திய எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(புதுடில்லி)

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறையமைச்சர் சிபிஸ் தோரனைக்கைது செய்ய வேண்டுமென்று பாரதிஜ ஜனதாக்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில் நீதிமன்றம் பிறப்பித்த கைது உத்தரவு இன்னமும் தங்களுக்குக் கிடைக்கவில்லையென ஜார்க்கன் மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.கடந்த பல ஆண்டுகளுக்கு முன் பிரிக்கப்படாத பீகார் மாநிலத்தில் நடந்த ஒரு படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஜார்க்கன் மாநிலத் தலைநகர் ராஞ்கியில் உள்ள நீதிமன்றம் சிபிஸ் தோரனுக்கு அண்மையில் கைது வாரண்ட் பிறப்பித்தது.

இந்நிலையில் குற்றவழக்கில் தொடர்புடைய சிபிஸ் தோரன் மத்தியமைச்சர் பதவியில் நீக்கக்கூடாது என்றும் கூறியதோடு அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்றும் பாரதிஜ ஜனதா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் இந்தக் கைது உத்தரவை எதிர்த்து ஜார்க்கன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்காக டில்லியில் இருந்து வழக்கறிஞர்கள் வந்திருப்பதாக ஜார்க்கன் முக்திமோர்சா கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# கும்பகோணத்தில் தீவிபத்திற்குள்ளானோருக்கு சோனியா ஒருகோடி ரூபா நிதியுதவி

(புதுடில்லி)

கும்பகோணம் பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகள் மற்றும் காயமடைந்த குழந்தைகளுக்கு பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுமென்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், காங்கிரஸ் தலைவருமான சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தவிர மத்திய மனித ஆற்றல் அமைச்சகத்தின் மூலம் குழந்தைகள் நலநிதியாக 25 இலட்சம் ரூபா வழங்கப்படுமென்றும் ,சோனியாகாந்தி அறிவித்துள்ளதுடன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் விரைவில் நிதியுதவி அளிக்குமென்றும் கூறியுள்ளார்.

நெஞ்சை உருக்கும் இந்த சம்பவத்தினால் தாம் மிகவும் துயரமடைந்திருப்பதாகக் கூறிய சோனியா காந்தி இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதுடன் தீ விபத்து இடம்பெற்ற பாடசாலையினைச் சென்று பார்வையிட்டார். அத்துடன் காயமடைந்த சிறுவர்களையும் பார்வையிட்டுள்ளார்.

# சிவசேன ஆட்சிக்கு வந்தால் விவசாயத்திற்கு இலவச மின்சாரம்

## பால்தக்கரே வாக்குறுதி

மகாராஷ்டிர மாநிலத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் சிவசேனக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும், விவசாயிகள் வாங்கியிருக்கும் வேளாண் கடன்கள் ரத்து செய்யப்படும் என்று அக்கட்சியின் தலைவர் பால் தக்கரே வாக்குறுதி அளித்துள்ளார்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலின் போது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் புறக்கணித்ததால் தான் தேசிய சனநாயகக் கூட்டணி தோல்வி அடைந்தது என்பதை உணர்ந்து கொண்டதால் மகாராஷ்டிரத்தில் வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலின் போது விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது என்று சிவசேன முடிவு செய்துள்ளது. வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய உத்தியை வகுப்பதற்காக சிவசேன கட்சியின் இரு நாள் மாநாடு ஔரங்காபாதில் நடைபெறுகிறது

# றிச்சர்ட் ஆர்மிரேஜ் மன்னிப்புக் கோரினார்

(புதுடில்லி)

ஜார்ச் பேர்னாண்டஸ் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது அமெரிக்கா சென்ற இரண்டு தடவைகளும் முழு உடைகளையும் கழைந்து பரிசோதிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டிற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் இந்தியாவுக்கு வந்த போது தொலைபேசி ஊடாக மன்னிப்புக் கோரியுள்ளார்.கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய ஆர்மிரேஜ் அந்தச் சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பது பற்றி தாம் விசாரிப்பதாக ஜார்ச் பேர்னாண்டஸிடம் உறுதியளித்திருப்பதாகக் கூறியுள்ளார்.இதே வேளை அமெரிக்கத் தூதரகமும் இச்சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ளது.

# வீரப்பன் பிடியிலிருந்து நடிகர் ராஜ்குமாரை மீட்க ரூ.20 கோடி கொடுக்கப்படவில்லை.

## கர்நாடக முதல்வர் தரம்சிங் மறுப்பு

சந்தனக்கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்ட நடிகர் ராஜ்குமாரை மீட்க ரூ. 20 கோடி கொடுக்கப்படவில்லை என்று கர்நாடக முதல்வர் என் தரம்சிங் திட்டவட்டமாக மறுத்தார். கர்நாடக உதவிப் பொலிஸ் கமிஷனர் சங்ராம்சிங் பணியிலிருந்து ஓய்வு பெறும் முன் முத்திரைத்தாள் மோசடி வழங்குத் தொடர்பாகப் பணி இடை நீக்கம் செய்யப்பட்டார். கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்ட சங்ராம்சிங் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு வாக்கு மூலம் அளித்தார். நடிகர் ராஜ்குமாரை மீட்க முத்திரைத்தாள் மோசடி வழக்கின் முக்கிய குற்றவாளி அப்துல் கரீம் தெல்கியிடம் ரூ.20 கோடி பெற்றதாகக் கூறினார். அந்தப் பணத்தை வீரப்பன் பிடியிலிருந்த நடிகர் ராஜ்குமாரை மீட்கப் பயன்படுத்தியதாகவும் கூறினார். முன்னாள் அமைச்சர் றோஷன் பெய்க்கை இந்த வழங்கிலிருந்து காப்பற்ற முன்னாள் முதல்வர் கிருஷ்ணா, அமைச்சர்கள் மல்லிகார்ஜுன கார்கே,டி.கே சிவகுமார் அப்போது காங்கிரஸ் பொதுச் செயலாளராக இருந்த மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் ஆகியோரின் நிர்ப்பந்தத்தால் நான் பலிக்கடா ஆக்கப்பட்டுவிட்டேன் என்றும் கூறினார். சங்ராம்சிங்கின் இந்த அறிவிப்பு கர்நாடக அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. இது குறித்து கர்நாடக முதல்வர் தரம்சிங்கிடம் நடிகர் ராஜ்குமாரை மீட்க ரூ.20 கோடி கொடுக்கப்பட்டது உண்மையா? என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு தரம்சிங் அளித்த பதிலில், ''எஸ்.எம். கிருஷ்ணா தலைமையில் இருந்த முந்தைய அமைச்சரவையில் நானும் இடம் பெற்றிருந்தேன். ராஜ்குமார் கடத்தப்பட்ட சமயத்தில் அவரை மீட்க அரசு விரைவான நடவடிக்கையை மேற்கொண்டது. ராஜ்குமாரை மீட்க வீரப்பனுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. சங்ராம்சிங் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானது. எந்த நோக்கத்தில் அவர் இவ்வாறு சொன்னார் என்பது தெரியவில்லை. அரசுப் பணியில் இருந்தபோது முறைகேடாக நடந்துகொண்டதற்காக நடவடிக்கை எடுத்ததற்கு சங்ராம்சிங் ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை" என்றார்.


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 08 . 05 . 1930

உதிர்வு 20 . 06 . 2004

அமரர்

திருமதி பொன்னு நல்லதம்பி

இறைவன் தந்த முத்தே இனிய
எங்கள் சொத்தே உமது பிரிவு
தாங்காது கலங்குகின்றோம்.

இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளில் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 20.07.2004 (செவ்வாய்க்கிழமை) நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல், கனகர் கனகசபை நல்லதம்பி
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
மாமூலை, முள்ளியவளை

(4829)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஆசிய கிண்ணத்துக்கான அடுத்துவரும் போட்டிகள் விபரம்

21.07.04. இந்தியா எதிர் பங்களாதேஷ் கொழும்பு எஸ்.எஸ். சி.மைதானம் (பகல்போட்டி) அதேதினம் பாகிஸ்தான் எதிர் சிறிலங்கா ஆர் பிரேமாதாசா மைதானம் (பகல்/இரவு) ஆட்டம்

23.07.04. பங்களாதேஷ் எதிர் சிறிலங்கா பிரேமதாசா மைதானம் (ப/இரவு)

25.07.04.பாகிஸ்தான் எதிர் இந்தியா, பிரேமதாசா மைதானம் (ப/இரவு)

27.07.04. சிறிலங்கா எதிர் இந்தியா பிரேமதாசா மைதானம் (ப/இரவு)

29.07.04. பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ் பிரேமதாசா மைதானம் (ப/இரவு)

01.08.04. இறுதிப்போட்டி.

# இந்திய அணிக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி பங்கேற்கும் - டால்மியா

ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சென்னை உட்பட ஆறு இடங்களில் நடைபெறும் கிரிக்கெட் டெஸ்ட்போட்டிகளில் இந்திய அணியுடன் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்கவுள்ளன.

கொல்கத்தா, மும்பை, நாக்பூர், பெங்களூர், கான்பூர், ஆகிய ஐந்து நகரங்கள் போட்டி நடை பெறும் மற்றைய இடங்களாகும்.

ஒக்டோபர் மாதம் இந்தியா வரும் அவுஸ்திரேலியா அணி 4 போட்டிகளிலும் - நவம்பர் மாதம் வரும் தென்னாபிரிக்க அணி 2 போட்டிகளிலும் பங்கேற்கும் என்று இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்திலும், ஜெய்ப்பூரிலும் கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி மூலம் நடைபெறும் என்று டால்மியா தெரிவித்தார்.

- ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி -

# இந்திய அணி போராடியது ______ வெற்றி பெற்றது சிறிலங்கா அணி




ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதற்சுற்று கடைசி லீக் போட்டியில் குழு Bயில் இடம் பெற்றுள்ள இந்திய-சிறிலங்கா அணிகளுக்கிடையிலான போட்டியில் சிறிலங்கா அணி 12ஓட்டங்களால் இந்தியாவைத் தோற்கடித்தது.

ரங்கிரி தம்புள்ள விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பகலிரவு ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 4விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சமன்ஜெயந்த 34 ஓட்டங்களையும் அவிஸ்குணவர்த்தன 49 ஓட்டங்களையும், மாவன் அத்துப்பத்து 50 ஓட்டங்களையும், குமார்சங்கக்கார 57ஓட்டங்களை யும், ஜெயவர்த்தன 58 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று சிறிலங்காவின் மொத்த ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தனர்.

இதனைத் தொடர்ந்து 283 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 8விக்கெட் இழப்பிற்கு 270 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

போட்டியின் ஆரம்பம் முதலே இந்திய அணி துடுப்பாட்ட வீரர்கள் சிறிலங்காவின் துல்லியமான பந்து வீச்சில் நிலைகுலைந்தனர்.

சச்சின் டெண்டுல்கர் 11ஓட்டங் களையும், கங்குலி பார்திபட்டேல் ஆகியோர் தலா 6ஓட்டங் களைப் பெற்று ஆட்டமிழந்தனர். சிறப்பாக துடுப் பெடுத்தாடிய ராவிட் 82 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் 47




ஓட்டங்களையும் பெற்று இந்தியாவுக்கு வலுவூட்டிய போதும் தோல்வியைத் தவிர்க்க முடியாது போனது.

பந்து வீச்சில் நுவான்சொய்சா 3விக்கெட்டுக்களையும், சமிந்த வாஸ் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# "கோபா" கால்பந்து சம்பியன் அரையிறுதி ஆட்டம்; கொலம்பியாவை எதிர்கொள்கிறது ஆர்ஜன்டீனா



பெருவில் நடைபெற்றுவரும் தென் அமெரிக்க (கோபா) கால்பந்து சம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொலம்பியாவை எதிர் கொள்கிறது ஆர்ஜன்டீனா. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பரபரப்பான காலிறுதி ஆட்டத்தில் போட்டியை நடத்தும் பெருவை 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனா தோற்கடித்தது. ஆர்ஜென்டீனா அணியில் பதில் ஆட்டக்காரராகக் களமிறங்கிய கார்லோஸ் டெவஸ் ஆட்டத்தின் 61-வது நிமிஷத்தில் வெற்றிக் கோலை அடித்தார். களமிறங்கிய 3ஆவது நிமிடத்தில் அவர் இடது ஓரத்திலிருந்து அடித்த பந்து நேரடி யாக வலைக்குள் இறங்கியது. அதுவே வெற்றிக் கோலாகவும் அமைந்தது. 'எனக்கு வந்த பந்தை எப்பொழுதும் போல காலால் எட்டி உதைத்தேன். அது வலைக்குள் சென்று கோலாகிவிட்டது' எனப் பெருமிதம் பொங்கக் கூறினார் டெவஸ். ஆர்ஜன்டீனா கோல் அடித்த நான்காவது நிமிடத்தில் பெரு அணியின் நோல்பெர்டோ சோலானாவுக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அவர் உதைத்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியே சென்றுவிட்டது.

'இரண்டு அணிகளுமே வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்புடன் ஆடின. ஆர்ஜென்டீனாவைப் போலவே எங்களது அணியினரும் சிறப்பாக ஆடினர். ஆனால், எங்களது அணியினரால் கோல் அடிக்க முடியவில்லை' எனப் பெரு அணியின் பயிற்றுநர் விக்டர் ஜெகாரா கூறினார். மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் கொலம்பியா 2-0 என்ற கோல் கணக்கில் கோஸ்டாரிக்காவை எளிதாக வென்று அரையிறுதியில் நுழைந்தது.




# ஒலிம்பிக்கிற்கான இந்திய ஹொக்கி அணியில் தமிழ் நாட்டை சேர்ந்த தன்ராஜ்பிள்ளை

எதென்ஸ்ஒலிம்பிக் போட்டிக்கான 16 பேர் கொண்ட இந்திய ஹொக்கிஅணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த தன்ராஜ்பிள்ளை, மற்றும் திலிப் திர்கே, தீபக்தாகுர், பல்ஜீத்சிங்தில்லான் ஆகியோர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

அணிக்கு திலிப்திர்கே தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கேரள மங்கை பாபி அலாய்சியஸ் எதென்ஸ் ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்றார்

இந்தியாவின் கேரள வீராங்கனை பாபி அலாய்சியஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

மகளிருக்கான உயரம் தாண்டுதலில் 3 ஆவது வாய்ப்பில் 1.91 மீற்றர் உயரம் தாண்டி புதிய தேசிய சாதனை படைத்தார்.

அத்துடன் ஒலிம்பிக் போட்டிக்கான பி.தகுதி இலக்கையும் (1.91 மீற்றர்) அவர் எட்டினார்.

பெங்களூரில் 2002 இல் நடைபெற்ற போட்டியில் அவர் 1.90 மீற்றர் உயரம் தாண்டியதே இதுவரையிலான தேசிய சாதனையாக இருந்தது.



சீனத் தலைநகர் பிஜிங்கில் சனிக்கிழமை ஆரம்பமான ஆசியக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் சீன-பஹ்ரெய்ன் அணிகள் மோதும் காட்சி.

# மன்னாரில் நடைபெற்ற 46 பொதுமக்கள் படுகொலை ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டி

வட்டக்கண்டலில் வைத்து 31.01.1985 அன்று சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் உட்பட 46 பொதுமக்களையும் நினைவு கூரும் முகமாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் மன்னார் வட்டக்கண்டல் சுடர்ஒளி விளையாட்டுக்கழத்தினரின் ஆதரவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதற்கு அடம்பன் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் றோபேட் அவர்கள் தலைமைதாங்கினார். 26 கழகங்கள் பங்குபற்றிய கால்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டியில் இலுப்பைக்கடவை அந்தோனியார்புரம் சென்அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும், மாளிகைபபிட்டி சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் அந்தோனியார் புரம் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

இதேபோன்று கிரிக்கெட் போட்டியில் கட்டையடம்பன் சென்மேரியாள் விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதன் போது சிறந்த பந்துவீச்சாளராகவும் சகலதுறை ஆட்டக்காரராகவும், சுதா தெரிவானார். போட்டிகளுக்கு மத்தியஸ்தராக மாந்தை மேற்கு விளையாட்டு அதிகாரியும், இவருடன் ஈசன்,விஜிதரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள்.(மி)


-மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி-

# கிளிநொச்சியில் இருந்து சென்ற இரண்டு அணிகள் புறக்கணிப்பு

வருடாந்த மெய்வல்லுனர், மற்றும் பெருவிளையாட்டுப் போட்டிகளின் மாகாண மட்டத்திலான போட்டிகள் திருகோணமலையில் தற்போது ஆரம்பமாகியுள்ளன. இப்போட்டிகளுக்கான கிளிநொச்சி மாவட்டத்திலே இருந்து தெரிவாகிக் கரப்பந்தாட்டப் போட்டிக்காகச் சென்ற கிளி/ புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம், மற்றும் கிளி/பாரதிவித்தியாலயத்தைச் சேர்ந்த 19வயதுப் பிரிவு மாணவர்களின் கரப்பந்தாட்டப்போட்டி அணிகள் இரண்டும் விளையாட்டு அதிகாரிகளினால் புறக்கணிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டுள்ளன.


இப்பாடசாலைகளின் அணிகளில் ஓரிரு மாணவர்கள் குறித்த போட்டிக்குப் பங்குபற்றும் வயதினரை விட ஒருவயது குறைவாக இருந்தமையே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது எப்போதும் வயது கூடிய மாணவர்கள் அணியில் இடம்பெறுதல் முறையற்றதாகவும் பங்கு பற்ற முடியாதமையும் வழக்கமாக இருந்து வந்த விதிமுறையாகும். ஆனால் ஓரிரு வயது குறைந்தவர்கள் தமது திறமையின் மூலம் வயது கூடிய அணியில் விளையாடுவதும் தவறானதாக விலக்கப்பட்டுள்ளது.

இவ்வணிகள் கோட்டமட்டத்திலும் வலயமட்டப் போட்டிகளிலும பங்கு பற்றி வெற்றிபெற்ற போதும் கிளி.வலயப் பாடசாலைகளின் விளையாட்டு அதிகாரிகள் பலர் இருந்து நடாத்தி வைத்த போதும் இவ்வாறான ஒரு விடயம் தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படைமையே இந்நிலைக்குக் காரணமாகும். இதேவேளை சமாதான காலத்திற்குப் பின்னர் வன்னிப் பிரதேசப் பாடசாலைகள் இரண்டு, மூன்று தடவை மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பற்றிவந்தபோதிலும் விளையாட்டு அதிகாரிகள் இவ் விடயத்தில் போதிய விழிப்புணர்வுடன் விதிமுறைகளைக் கூறி வைக்கவில்லை. இது மாணவர்களின் திறமைகள் வெளிக்கொண்டு வரமுடியாத நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டது. இது கவலை தருவதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



படகு வலிக்கும் போட்டியொன்றில் பங்குபற்றுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் டென்வர் புறொன்கொஸ்

## சிந்தனைக்கு



ஒரு விடுதலைப் போராளியானவன் தனது சுயத்தின் வரம்புகளுக்கு அப்பால் மேலோங்கி, தன்னை முழுமையாகப் போராட்டத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும்.

தமிழீழதேசியத்தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 20-07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com


## அரசின் எதிர்காலம்?

இன்று கூடவுள்ள பாராளுமன்றம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்குப் பெரும்சவால் நிறைந்ததொன்றாகவே நிச்சயம் இருக்கும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும் சவாலை எதிர்கொள்ளப்போவது மட்டுமல்ல இலங்கையின் எதிர்கால அரசியல் குறித்தும் முக்கிய முடிவுகள், திருப்பங்களுக்கு வழி வகுக்கத்தக்கதாக இவ் அமர்வு அமையக்கூடும்.

ஆளும் ஐ.ம.சு.முன்னணிக்கு இரண்டு வகையில் இக்கூட்டத் தொடர் முக்கியம் வாய்ந்ததாகின்றது. ஒன்று அரசாங்கம் இக்கூட்டத் தொடரில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளது. இரண்டாவது மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விவாதத்தில் ஆளும் கூட்டணியின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

தேர்தல் முடிவடைந்து சுமார் மூன்று மாதங்கள் ஆகியும் அரசாங்கம் இன்னமும் தனது அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை. சபாநாயகருக்கான போட்டியில் ஆளும் தரப்பு தோல்வியடைந்தபோதே அரசின் பெரும்பான்மை குறித்த கேள்வி எழும்பியதாயினும் இது குறித்து எவரும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை உடன் நிரூபிக்குமாறு நிர்ப்பந்தம் கொடுக்கவில்லை.

ஆனால் தற்பொழுது மூன்று மாதங்கள் கடந்துவிட்டதனால் அரசாங்கம் தனது பெரும்பான்மையைத் தார்மீக ரீதியில் நிரூபிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு இல்லாதுவிட்டால் அதாவது, முடியாதுவிட்டால் அரசாங்கம் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியதாகவே இருக்கும். ஆனால் தற்பொழுது கூட அரசாங்கத்தினால் பெரும்பான்மையை நிரூபிக்கமுடியுமா? என்பது கேள்விக்குரியதே.

சனாதிபதிசந்திரிகா பாராளுமன்றத்தை நீண்டநாட்கள் ஒத்திவைத்தமையே அறுதிப் பெரும்பான்மையைத் தேடிக்கொள்வதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே. இதற்கான பெரும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைக் குறிவைத்தே நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இம்முயற்சியில் அரசாங்கத்தரப்பு வெற்றிகண்டதா? என்பதை இதுவரை அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. ஆளும் தரப்பு இ.தொ.கா.வின் ஒத்துழைப்புடன் பெரும்பான்மையை நிரூபிப்போம் எனக் கூறிவருகின்ற போதும் அதற்கான முழு அளவிலான ஏதுநிலை இருப்பதாக இல்லை. இ.தொ.கா.வின் நிலைப்பாடு குழப்பகரமாகவே உள்ளது. அது மாத்திரமல்ல இ.தொ.கா.தலைவர் ஆறுமுகம் தொண்டமான் திடீரென ஹொங்கொங் கிளம்பிச் சென்றுள்ளமையால் ஆளும் தரப்பின் முயற்சிகள் முழு அளவில் வெற்றிபெறவில்லை என்றே எண்ணக்கிடக்கின்றது.

இந்த வகையில் பெரும்பான்மையை நிருபித்தல் என்பது சந்தேகத்திற்கு இடமானதாக இருக்கையில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விவாதம் ஆளும் கூட்டணிக்குள் மேலும் பிளவுகளையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் ஒன்றாக மாறுவதற்கான வாய்ப்புக்களே நிறைய உண்டு.குறிப்பாக ஜே.வி.பி.அமைப்பானது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பதைத் திட்டவட்டமாக எதிர்க்கின்றது. அதுமட்டுமல்ல இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு என்பதையே அது எதிர்த்து வருகின்றது. இந்நிலைப்பாட்டை இவ்விவாதத்தின் போது ஜே.வி.பி உறுதியாக வெளிப்படுத்தும் என்றே எதிர்பார்க்கலாம்.

ஆனால் ஜே.வி.பி.யின் இந்நிலைப்பாட்டை சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் வெளிப்படையாக ஆதரிக்க முடியுமா? என்பது முக்கியமான பிரச்சினையாகும். ஏனெனில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து குழப்பமான நிலைப்பாட்டைக் கொண்டதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், சனாதிபதி சந்திரிகாவும் இருப்பினும் இதனை அவர்கள் இதுவரை ஒட்டு மொத்தமாக நிராகரிக்கவில்லை.

அவ்வாறு அவர்கள் நிராகரிக்காமையால் இ.த.அ.சபை தொடர்பான ஆதரவு நிலைப்பாட்டை அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பது அர்த்தமாகாது. ஆனால் அவர்களின் கடந்தகால அனுபவங்கள் சர்வதேசத்தின் நிலைப்பாடு, மற்றும் சிறிலங்கா அரசிற்கான தேவை என்பன இதனை முற்றாக நிராகரிக்க முடியாததொரு நிலையையே ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் ஆளும் கூட்டணிக்குள் முரண்பாடுகள் தோன்றாத வகையில் நிலைப்பாட்டினை மேற்கொள்வதா? அன்றி அரசின் தேவை கருதி நிலைப்பாட்டை மேற்கொள்வதா ?என்பதற்கு சுதந்திரக்கட்சி தீர்வுகாண வேண்டியதாக இருக்கும்.இதில் எந்த நிலைப்பாட்டை சு.கட்சி எடுப்பினும் அது அரசாங்கத்தைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்குவதாகவே இருக்கும். அதாவது இ.த.அ.சபையை நிராகரிக்கும் வகையில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமானால் அதுபெரும்பாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பதான முடிவாக இருக்கும். மாறாக ஆதரவானதாகவோ அன்றி விவாதத்திற்குரியதாகவோ கொள்ளப்படினும் ஆளும் கூட்டணிக்குள் முரண்பாட்டை வளர்ப்பதாக இருக்கும், இந்தவகையில் இக்கூட்டத்தொடரானது ஐ.ம.சு.மு. அரசாங்கத்தின் எதிர்காலம், சமாதான முயற்சியின் எதிர்காலம் இலங்கையின் எதிர்காலம் என்பவற்றைத் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கும் எனின் மிகையாகாது.

குறிப்பு:-

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விவாதம் ஒத்திவைப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளதென்ற அறிவிப்பு வெளிவரும் முன்பாக இத்தலையங்கம் எழுதப்பட்டது.

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக புலிகளின் பதிலை எதிர்பார்க்கிறேன்

### -ஜேர்மன் அமைச்சரிடம் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் தற்போது அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் இது தொடர்பாக விடுதலைப்புலிகள் அளிக்கவுள்ள பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜெஷ்கா பிஷரிடம் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சரும் அவரது குழுவினரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று சனாதிபதி மாளிகையில் சந்தித்தபோதே அதைப்பற்றி சனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சகல பிரிவு மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காண அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவிற்கு இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் பிஷரும் அவரது குழுவினரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடியுள்ளனர்.

# கூட்டமைப்பினரின் கோரிக்கைகளுக்கிணங்க இ.நி.சபைகுறித்த விவாதம் பிற்போடப்பட்டது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்றை நிறுவுவது தொடர்பான விடுதலைப்புலிகளின் யோசனை பற்றிய பாராளுமன்ற விவாதம் தமிழ்க் கூட்டமைப்பு அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கு அமைய பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சித்தலைவர்களுக்கான கூட்டத்தில் இந்தத் தீர்மானம்எடுக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

மேற்படி தீர்மானம் தொடர்பான விவாதம் இன்று நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசசிங்கம், தமது கட்சித் தலைவர் ஆர், சம்பந்தன் வெளிநாடுசென்றிருப்பதால் விவாத்ததை பிற்போடுமாறு கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்திருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப் புலிகளின் யோசனை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரி உள்ளது.

இது இவ்வாறிருக்க, இந்த விவாதத்தை எந்தவொரு தினத்திலும் நடத்துவதற்கு அரசாங்கம் தாம் ஆயத்தமாக இருப்பதாக அரசாங்கம் சார்பில் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## ரத்தினசிறி விக்கிரமநாயக்கவை விவாதத்திற்குஅழைக்கிறார் கிரியல்ல

(கொழும்பு)

முன்னாள் பெருந்தோட்டத் துறைஅமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல முன்னாள் பிரதமர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்கவை தொலைக்காட்சி விவாதம் ஒன்றிற்கு அழைத்துச் சவால் விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் பெருந்தோட்ட அமைச்சுகையாளப்படுவது குறித்தே இவ்விவாதம் நடாத்தப்பட வேண்டுமென கிரியல்ல கூறியுள்ளார். தனது பதவிக் காலத்தில் ஒழுங்கீனங்கள் நடந்ததாகக் குற்றம்சாட்டப்படுவது குறித்துத் தற்போதைய பெருந்தோட்ட அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவிற்கு கடிதம் எழுதியுள்ள கிரியல்ல மேற்படி விவாதத்திற்கு ஏற்பாடு செய்யுமாறும் அமைச்சரைக்கோரியுள்ளார்.

### கோயிலாக்கண்டி மக்கள் பிரச்சினை

# யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதிக்கு இலங்கை ம.உ.ஆணைக்குழு அழைப்பு

தென்மராட்சி தெற்கின் கோயிலாக்கண்டி பகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 4 வருடங்களுக்கு மேலாக கோயிலாக்கண்டி மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு படைத்தரப்பு விதித்துள்ள தூர எல்லைகள் தொடர்பாகவும், நேரம் மற்றும் சோதனை என்ற பெயரில் மீன்பிடி வலைகள் அறுக்கப்படுகின்றன. அத்துடன் இரவு வேளைகளில் படையினரால் மீன்கள் களவாடப்படுகின்றமை தொடர்பாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இவ்விடயங்கள் தொடர்பாக கோயிலாக்கண்டி மீனவசங்கம் மகஜரொன்றினை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் அண்மையில் கையளித்திருந்தனர்.

இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பாகவே எதிர்வரும்நாட்களில் யாழ். மாவட்டபடைத்தலைமையுடன் பேச்சுக்களை நடாத்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதேவேளை இப்பேச்சுக்களில் கோயிலாக்கண்டி மீனவசங்கப் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (27)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜேர்மனி பூரண ஆதரவு வழங்கும்

### ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சர்

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வில் தமது நாடு பூரணஆதரவைத் தரத் தயாராக உள்ளதாக ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெஷ்கா பிரஷர் தெரிவித்துள்ளார். இன்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் தென்னாசியாவில் அவசரமானதும் அவசியமானதுமான பிரச்சினையாக இலங்கை இனப்பிரச்சினையே காணப்படுகிறது. எனவே அது தீர்க்கப்பட்டால் மாத்திரமே இலங்கைக்கான முதலீட்டு வைப்புக்களைத் தமது நாடு வழங்கக் கூடியதாக இருக்கும். மேலும் நோர்வே நாடு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் மிகவும் சிரத்தையுடன் செயற்பட்டு வருகிறது. இந்த நிலையில் அந்த நாட்டுக்கு இது தொடர்பில் எவ்வாறான உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (32)

## இன்று விவாதம்

(கொழும்பு)

. தேர்தல் சட்டத்திருத்தம் பற்றி அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பான விவாதம் இன்று பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர் அவர்களுக்கான கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பான நிலைப்பாட்டை அரசு வெளியிட வேண்டும்

### -ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியது

அரசாங்கம் இடைக்கால தன்னாட்சித் தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளியிட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார். இன்று நடைபெறவிருந்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான பாராளுமன்ற வாதத்தை வேறு திகதிக்கு மாற்றியதற்கு அரசகட்சி இணங்கியதற்கு இதுவே காரணமென அவர் குறிப்பிட்டார். நேற்றுப் பாராளுமன்றக் கட்சித்தலைவர் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இடைக்கால நிர்வாகம் தொடர்பான உண்மையான நிலைப்பாட்டை வெளியிடாமல் அது தொடர்பாக குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சி மீது சுமத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத தொன்று என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (32)

# 25 ஆண்டுகளாகப் பயங்கரவாதத்தடைச்சட்டம் அதன் நோக்கத்தை ஒருபோதும் எட்டவில்லை

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்கு வந்து நேற்றுடன் இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. எனினும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அதன் நோக்கத்தை எட்டவில்லை என அவதானிகள் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன அரசியல் சட்ட ஆய்வாளரும் கண்டியைச் சேர்ந்தவருமான எஸ்.பாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கம் 1979ஆம் ஆண்டு இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிறைவேற்றியது.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அரச பயங்கரவாதத்தை நிறுவனமயப்படுத்துவதற்கும் மறுபக்கத்திலே ஆயுத மேந்திய இளைஞர் குழுவிற்கு வலுவூட்டுவதாகவுமே அமைந்தது என்றே கூறலாம்.

ஏனெனில் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது தமிழ் மக்கள் மத்தியிலே பயிற்றப்பட்ட ஆயுதம் தரித்த இளைஞர்கள் இருபத்தைந்து பேர் இருந்தார்களா என்பது சந்தேகமே. அதேவேளை அவர்களிடம தானியங்கி ஆயுதங்களும் அப்போது இருக்கவில்லை.

ஆனால் இந்தப் பயங்கரவாதத தடைச்சட்டமூலம் அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு இந்த இன முரண்பாடு முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டது.

இந்த இராணுவ மயப்படுத்தலின் மூலமாக முழுச் சமூகமும் அரச கட்டுமானங்களும், பாதுகாப்புத்துறையும் இனவாத மயப்படுத்தப்பட்டது.

இதேவேளை கடந்த இரண்டு ஆண்டுகளாகப் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள இந்தக் காலப்பகுதியில் சட்டம் அமுல்ப்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அல்லது பயன்படுத்துவதை இரு அரசாங்கமும் தவிர்த்துள்ளமை ஒழிய இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு எந்தவிதமான முயற்சியையும் எடுக்கவில்லை,

உண்மையில் இந்தச்சட்டம் முதன் முதலில் கொண்டுவரப்பட்ட பொழுது வடக்கு-கிழக்கிற்கென ஒரு தனியான சட்டமாக வந்து நிரந்தர சட்டமாக மாற்றப்பட்டதன் பின்னர் எண்பத்தெட்டாம் ஆண்டில் இருந்து தொண்ணூறாம் ஆண்டிற்கு இடையில் சிங்கள இளைஞர்கள் ஜனதாவிமுக்தி பெரமுன இளைஞர் கிளர்ச்சியின்போதும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுக் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டமையும் இந்தச்சட்டத்தின் விளைவே. பொதுவாக இந்தச் சட்டம் அந்தந்தக் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு எதிராக வருகின்ற சவால்களைச் சமாளிப்பதற்கும், பெரும்பான்மை இன ஆட்சியை பலமாகத் தக்கவைத்துக் கொள்வதற்கும் தான் இதுவரை பயன்பட்டுவந்துள்ளது என்றார் அவர்.

# இன்றைய கூட்டத் தொடர் வெள்ளிவரை நடைபெறும்

பாராளுமன்றம் நீண்டநாட்களின் பின் இன்று கூடுகின்றது இக் கூட்டத் தொடரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடாத்துவதற்கு நேற்றுக் கூடிய கட்சித்தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர். இதன்படி நடைபெறவிருந்த வடக்குக்கிழக்கு இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான விவாதம் எதிர்வரும் ஓகஸ்ட் 12ஆம் திகதி முழுநாளும் நடைபெறவுள்ளது. இந்த விவாதத்தை பிரிதொரு தினத்திற்கு மாற்றுவதற்கு தமிழரசுக்கட்சி கேட்டுக்கொண்டது. தமது கட்சி உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்திருப்பதால் திகதியைப் பிற்போடுமாறு கேட்டதற்கிணங்கவே ஓகஸ்ட் 12ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. இதேவேளை இன்று நடைபெறுகின்ற பாராளுமன்ற அமர்வில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தமது பெரும்பான்மையை நிரூபிக்க முனைப்புடன் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இன்று சுயாதீனமாக தகவல்களை அறிந்து கொள்ளும் பிரேரணை தொடர்பான விவாதமும் அரசாங்கத்தின் தற்போதைய நகர்வுகள் தொடர்பான விவாதமும் நடாத்த நேற்றைய கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (32)

# யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான மாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உடற்கல்வி விஞ்ஞானத்துறை மாணவர்கள் காலவரையறையற்ற வகையிலான விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கும் போராட்டமொன்றை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

தற்போது நடைமுறையில் இருக்கும் உடற்கல்வி விஞ்ஞானத் துறைக்கான கற்றல் காலமான இரண்டு வருடங்களை மூன்று வருட காலமாக அதிகரித்தல் மற்றும் கல்வியைப் பூர்த்தி செய்து வெளியேறும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பினை வழங்குதல் என்பவற்றை வலியுறுத்தியே இப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை விரைவில் கூடவுள்ள மூதவைக் கூட்டத்தில் மாணவர்களது கோரிக்கைகளை பரிசீலிப்பதாகக் கூறி. பகிஷ்கரிப்புப் போராட்டத்தை கைவிடுமாறு பல்கலைக் கழக நிர்வாகம் கோரியிருந்தது.

எனினும் பல்கலைக்கழகத்தின் மூதவைக்கூட்டத்தில் தமது கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அவை அமுல்படுத்தப்படும்வரை இப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை தாங்கள் கைவிடத்தயாரில்லையென மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மேற்படி பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு துறைசார் வேலைகள் வழங்கப்படாதிருக்கின்றமையை கண்டித்து இப்பட்டதாரிகள் யாழ். கல்வித்திணைக்களம் முன்பாக மறியல் போராட்டங்களை அண்மையில் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்களை தொடர்வது குறித்து சிறிலங்காவில் சர்வசன வாக்கெடுப்பு?

இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வது குறித்து சர்வசன வாக்கெடுப்பொன்று சிறிலங்காவில் விரைவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்தவேண்டுமா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டுமென ஜே.வி.பி சனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது ஜே.வி.பி.யினால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக் கொண்டுள்ள நிலையிலேயே இவ்விடயம் குறித்து வாக்கெடுப்பொன்று நடைபெறவுள்ளது. ஏனைய நாடுகளில் இடைக்கால நிர்வாகசபை போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவது வழக்கமென ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச இவ்விடயம் குறித்து சனாதிபதிக்கு சுட்டிக்காட்டியிருந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### உலக...

கழகப் பேராசிரியர் வி.நித்தியானந்தன் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை பேராசிரியர் சிறிஸ்கந்தராஜா (டென்மார்க்) நிகழ்த்தினார். நன்றியுரையை திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தின்பால் அபிவிருத்திப் பகுதி செல்வி மதி நிகழ்த்தினார்.

இந்நிகழ்வின் தென்னாசியாவிற்கான உலக வங்கியின் முதன்மைப்பணிப்பாளர் சந்தாயனன் தேவராஜன், உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீட்டர் கரோல்ட், சர்வதேச நாணய நிதியவதிவிடப்பிரதிநிதி ஜெசமி காட்டர், உலக வங்கித் தலைமை பொறியியலாளர் டோசியா காஸ்ரோ, யு.என்.எச்.சி.ஆர் இலங்கைப் பிரதிநிதி நீல்னரின், உலக சுகாதார ஸ்தாபன இலங்கைப் பிரதிநிதி டென்காம்போல் சர்வதேச நாணய நிதியப் பொருளாளர் செயற்றி விறல்ன்கோல் ஆகியோரும் விடுதலைப்புலிகளின் பொருளாதார ஜோய் மகேஸ்வரன் சிறான் திட்டப் பணிப்பாளர் இரேனியல் செல்வின் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண், தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கே.பி. றெஜி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பணிப்பாளர் கரிகாலன் உள்ளிட்ட பல்துறை சார்ந்தவர்களும் கலந்துகொண்டனர். (லோ,தீ)

### பாடசாலை....

வாசிகளிடம் விசயத்தைக் கூறிய மாணவன் மீண்டும் மயக்கமடைந்ததை அடுத்து கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ள இச்சமயம் சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சோதனைச் சாவடிகளையும் தாண்டி நடைபெற்றிருப்பது மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.மனித உறுப்புக்களை அபகரிக்கும் குழுவினர்செயலாக இருக்குமோ எனவும் மக்கள் அஞ்சுகின்றனர்.

### சிறிலங்கா...

சோனியாகாந்தி வெளிநாட்டு அமைச்சர் நட்வர்சிங் போன்ற பலரையும் சந்தித்து உரையாடியுள்ளார். இவரது இவ்விஜயம் மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்திருந்ததாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சமாதானத்...

கவே இருக்கிறது. மக்கள் மத்தியிலும் இன்று இத்தகைய கேள்வி எழுந்திருப்பது உண்மை. இன்று அரச தரப்பில் இருந்து வருகின்ற செய்திகள் எல்லாமே போருக்கான ஆயத்தத்தையும், யுத்தத்தை நோக்கித் தள்ளுகின்ற மாதிரியே இராணுவத்தளபதியினது கருத்திலிருந்து, அனைவரது கருத்துக்களும் இருக்கிறது. அண்மைய நாட்களில் கருத்துக்கணிப்பொன்று நடத்தப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் தென்னிலங்கையில் மேலோங்கி வருகிறது. இது உங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் இந்தச் சூழ் நிலையைக் குழப்புகின்ற நோக்கம் தான். உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட தமது உரிமைகளுக்காகப் போராடுகின்ற இனம்தான் தமது தலை விதியைத் தீர்மானிப்பதற்கு தீர்மானம் எடுப்பது வழமை. சிங்களப் பெரும்பான்மையினரால் ஒடுக்கப்படுகின்ற இனம் சிங்களவர்களிடையே போய் தமக்கு என்ன கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கருத்துக்கணிப்பு நடத்துவது ஒரு பொருத்தமற்ற விடயம். காலம் காலமாகத் தேர்தலிலும் அதைத்தான் செய்திருக்கிறார்கள். சிங்களப் பெரும்பான்மை இனம் எப்போதுமே தமிழ் மக்களை அடிமைப்படுத்துகின்ற சிந்தனைப் போக்கிலும் - செயற்பாடுகளிலும் இருந்ததன். காரணத்தால்தான் இந்தப் போராட்டம் தீவிரம் அடைந்தது. ஆகவே இந்த மக்களுக்கு என்னதேவை இந்த மக்களின் அபிலாசைகள் என்ன என்பதை அறிந்துகொண்டு அதற்கு தீர்வு காண முயல்வதுதான் பொருத்தப்பாடாக இருக்கும்.

***போர் ஆரம்பிக்கும் சாத்தியப்பாடுகள் இருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?***

எமது மக்களின் உரிமைகள் - அவர்களுடைய எதிர்காலம் என்ற வகையில் எங்களுடைய தேசியத்தலைவர் எப்போதுமே உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறார். சமாதான வழியில் தீர்வை எட்டுவதற்கான வாய்ப்பை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த வாய்ப்பை சீர்குலைத்துக்கொண்டு நிலைமையை யுத்தத்துக்குள் தள்ளுவது என்பது வேதனைக்குரிய விடயம்தான். இருந்தாலும் அதனை எதிர்கொண்டு எமது மக்களையும் - இந்தத் தேசத்தையும் பாதுகாக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு எங்களிடம் இருக்கின்றது என்ற வகையில் எங்கள் விடுதலை அமைப்பைச் சரியான நேரத்தில் சரியான சூழலில் எங்கள் தலைவர் அதற்கேற்ப முடிவுகளை எடுத்து வழிநடத்துவார். ஆகவே தென்னிலங்கையில் ஏற்படுகின்ற சூழலை வைத்துக்கொண்டு நாம் இப்போது எதனையும் உறுதியாகக் கூறமுடியாது. எங்கள் தலைமைப்பீடம் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

***அமைதிச் சூழலை தொடர்ச்சியாகப் பேணிக்கொண்டு எதுவித தீர்வும் இல்லாமல் இந்தப் பேச்சுக்கள் எத்தனை காலத்துக்கு அனுமதிக்கப்படும்?***

நான் ஏற்கனவே பல தடவை கூறியிருக்கிறேன். சர்வதேச சமூகத்துக்கும் எமது நிலைப்பாடுகளை தெளிவு படுத்திக்கொண்டு வருகின்றோம். அதாவது இது வரை காலமாக இலங்கை அரசாங்கம் எந்த விதமான ஒரு இணக்கப்பாட்டுக்கும் வந்து விடவில்லை இப்போது கிடைத்திருக்கின்ற இந்த இடைக்காலத்திலாவது எமது மக்களுக்குப் பயன்படக்கூடிய அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய வகையில் ஒரு தீர்வைக் கொண்டுவர முயல வேண்டும் இதற்குத் த்ர்வு காண்பதற்காகவே நாம் ஒரு இடைக்காலக் கோரிக்கை கூட முன் வைத்திருக்கிறோம். அதனைக் கூட அரசாங்கம் உதாசீனப்படுத்தி எமது மக்களுக்கு நன்மைகளும் இல்லாமல் பேச்சுவார்த்தை என்று சொல்லிக் கொண்டு எமது மக்கள் மீது தொடர்ந்தும் நெருக்கடிகளை திணித்துக் கொண்டு நிலைமையை இழுத்தடித்துச் செல்வது என்பது பாரதூரமான விளைவுகளைத்தான் எதிர்காலத்தில் ஏற்படுத்தும். ஆகவே அது பற்றி எமது தலைமைப்பீடம் பொருத்தமான நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்கும்.

***தமிழர் தாயகப்பகுதிகளில் உலக வங்கியால் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்கள் அதிகரிப்பதற்கான புதிய திட்டங்கள் இருப்பதாக உலகவங்கிப் பிரதிநிதிகள் உங்களிடம் கூறினார்களா?***

உலகவங்கியால் ஏற்கனவே பல வேலைத்திட்டங்கள் இங்கே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற இந்த மக்களுடைய அவசர மனிதாபிமானப் பணிகளுக்கு எங்களுடைய ஒத்துழைப்பை நிச்சயமாக நாங்கள் வழங்குவோம். ஆனால் இந்த வேலைத்திட்டங்கள் எமது மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கும், மக்களின் தேவைகளுக்கும் ஏற்ற அளவில் முன்னெடுக்கப்படுமா? என்பதுதான் இன்று ஒரு கேள்வியாக இருக்கிறது.

***யாழ், மன்னார், வவுனியா உட்பட இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களிடையே திட்டமிட்ட முறையில் கலாசாரச் சீரழிவுகள் நுழைக்கப்படுகின்றன. இதற்கு விடுதலைப்புலிகள் ஏதாவது நடவடிக்கை எடுக்கிறார்களா?***

உண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் இராணுவம், பொலிஸ் அவர்களுடைய நிர்வாகக் கட்டமைப்புக்களே அங்கு அதிகாரம் செலுத்துகின்றன. அவர்களது ஆளுகைக்குள்தான் அவை இருக்கின்றன. ஆகவே அதைகட்டுப்படுத்துகின்ற சட்ட ரீதியான வலு அவர்களிடம் தான் இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சட்டம், ஒழுங்கு என்பன மிகவும் உறுதியாகப் பேணப்பட்டு வருகின்றது. மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். அங்கே சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து சமூகச்சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன. அதற்குக் காரணம் அங்குள்ள படைத்தரப்பும் அவர்களுடைய நிர்வாகச் சீர்கேடுகளும் தான் அது இன்னும் இளந்தலைமுறையினர் மத்தியில் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றது. இது உண்மையிலே கவலைக்கிடமான ஒரு விடயம். எம்மைப் பொறுத்தவரை இன்று அரசியல் பணிக்காக சென்ற போராளிகள்தான் அங்கு செயற்பட்டு வருகிறார்கள். இவர்களினூடாக மக்களுக்குள் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, பொது அமைப்புக்களை உருவாக்கி சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை விழிப்புணர்வுகளின ஊடாக முன்னெடுத்துச் செல்ல நாம் சிலவேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம். ஒரு இறுக்கமான நடவடிக்கையை மேற்கொள்வதனூடாகவே இதனை ஒரு முழுக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரலாம். அந்த நிர்வாக அதிகாரம் எம்மிடம் இல்லாததன் காரணத்தால் அதனை நாம் முழுமைப்படுத்தி முன்னேற்றமடைய முடியாதிருக்கின்றோம். முடிந்தளவு கட்டுப்படுத்த முயலுகின்றோம். (லோ,தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.